விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 125 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 09 திங்கட்கிழமை (22.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## முச்சக்கரவண்டி - கொள்கலன் நேருக்கு நேர் மோதல்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி



13ஆம் பக்கம் பார்க்க

## கீதா கோபிநாத் - ஷெகான் சேமசிங்க இடையே முக்கிய சந்திப்பு



03ஆம் பக்கம் பார்க்க

## சு.க அலுவலகத்துக்கு முன் கடும் பதற்ற நிலை



13ஆம் பக்கம் பார்க்க

### ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் ; 5ஆம் ஆண்டு நினைவுகூரல்

# பிரதான குற்றவாளிகளை காப்பாற்ற பலரும் முனைப்பு

- பேராயர் குற்றச்சாட்டு
- நீதிக்கான தேவையை ஐ.நாவும் வலியுறுத்தியது
- கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனை



*(கொழும்பு) 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்று நேற்றுடன் ஐந்தாண்டுகள் நிறைவடைந்துள்ளன.*

*இதனை முன்னிட்டு நேற்று அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் விசேட ஆராதனைகள் இடம்பெற்றதோடு காலை 8.45 மணியளவில் இரு நிமிட அக வணக்கமும் இடம்பெற்றது.* *(16ஆம் பக்கம் பார்க்க)*

## சுதந்திரக் கட்சிக்குள்ளும் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலா?



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதே கட்சியின் பெரும்பாலானோரின் விருப்பம் என அக்கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் சிங்கள வார இதழ் ஒன்றுக்கு கருத்து 15

## ரணிலே அடுத்த ஜனாதிபதி இதுவே மக்களின் தீர்ப்பு

### அமைச்சர் பிரசன்ன



(களனி)

அரசியல்வாதிகளால் விநியோகிக்கப்படும் பொருட்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். 15

### சூடு பிடிக்கும் தேர்தல் களம்

## ரணில் - பசில் நாளை மந்திராலோசனை



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஸ்ரீ லங்கா பொதுஜன 15

### அநுர, சஜித்தை தமிழர்கள் நம்பமாட்டார்கள்

## ரணில் எந்தப் பக்கம் நின்றாலும் தமிழ் மக்கள் அவருக்கே வாக்களிப்பர்

### டிலானுக்கு வஜிர பதிலடி



(கொழும்பு)

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க எந்தப் பக்கத்தில் நின்று களமிறங்கினாலும், எந்தச் சின்னத்தில் போட்டியிட்டாலும் அவருக்கே வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் 15

## கார்ப்பந்தயத்தில் கோர விபத்து

### எழுவர் பலி ; 21 பேர் படுகாயம்



(தியாத்தலாவை)

பதுளை - தியத்தலாவை பகுதியில் நேற்று இடம் 15

## கருவள சிகிச்சை நிலையம் நேற்று அங்குரார்ப்பணம்




(யாழ்ப்பாணம்)

வைத்திய நிபுணர் அ.பாலசுப்ரமணியம் சாவித்திரி தேவி தம்பதிகளின் பங்களிப்புடன் சிவபூமி அறக்கட்டளை, யாழ்.போதனா வைத்தியசாலை, மருத்துவ பீடம் ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள பெண்க்ள் சுகநல நிலையத் திறப்பு 16

### ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல்

## அதிகாரம் எனக்குத் தந்தால் நீதியை நிலைநாட்டுவேன்

### பாராளுமன்றத்தில் சரத் பொன்சேகா



(கொழும்பு)

இழப்பீடு செலுத்துவதால் மாத்திரம் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு 16

### ஈரான் - இஸ்ரேல் போர்

## விமானப் பாதைகளில் மாற்றம் ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமான சேவையானது ஐரோப்பிய நாடுகளுக்கான விமானப் பாதைகளை மாற்றுவதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும்இடையே 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மதுபானசாலைகள் நாளை பூட்டு

(கொழும்பு)

பௌர்ணமியை முன்னிட்டு நாளையதினம் மதுபானசாலைகளை மூட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், மே மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வெசாக் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் மே 22, 23, 24ஆம் திகதிகளில் மதுபானசாலைகள் மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

# 5 போலி இணையத்தளங்கள் இணையத்திலிருந்து நீக்கம்

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் இணையத்தளத்தை ஒத்ததாகக் காணப்படும் போலி இணையத்தளங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறான 5 போலி இணையத்தளங்களை இணையத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார்.

இவ்வாறான போலி இணையத்தளங்களுக்குள் பிரவேசித்து 35 இற்கு மேற்பட்ட பண மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார். (ந-7,10)

# தென் மாகாண ஆளுநர் இராஜினாமா

(கொழும்பு)

தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி செயலாளரிடம் கையளித்துள்ளார்.

எதிர்வரும் மே 02ம் திகதி முதல் இந்த இராஜினாமா அமுலுக்கு வரும் என்றும் அவர் மேலும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ந-7,10)

# கால்நடைகளின் பதிவு கட்டாயம் அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கால்நடைகள் திருடப்படுவதை தடுக்கும் வகையில் அனைத்து கால்நடைகளையும் பதிவு செய்யும் நடவடிக்கையை கட்டாயமாக்குமாறு வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கால்நடைகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் பதிவாகின்றமையை கருத்திற் கொண்டு ஆளுநர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

கால்நடைகளை வளர்ப்போர் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் எனவும், வெளிமாவட்டங்களுக்குக்கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதியை வழங்கும் போது உரிய சட்ட விதிகளை அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கன்று பிறந்து 18 மாதங்களுக்குள் காது அடையாள வில்லைகளை பொருத்திக் கொள்வதை கட்டாயமாக்க வேண்டும் எனவும், அவ்வாறு செய்யாத கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளின் காது அடையாள வில்லைகள் பரிசோதிக்கப்பட வேண்டும் எனவும், உரிய நடைமுறைகளை பின்பற்றாத இறைச்சி வெட்டும் இடங்கள் மற்றும் விற்பனை செய்யும் இடங்களுக்குச் சீல் வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் தெரிவித்துள்ளார். (ந-7,10)

# சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் விசேட நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 28.04.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இச் செயற்குழுக் கூட்டத்தில் 2024 ஆம் ஆண்டிற்குரிய இளஞ்சைவப் புலவர் சைவப்புலவர் பரீட்சை சம்மந்தமான விடயங்கள் மற்றும் பட்டமளிப்பு விழா, சைவமாநாடு, சைவநாதம் வெளியீடு சம்மந்தமான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளதனால் அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ந-7,10)



கார்/ வான் வாடகைக்கு

கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: (528)

077 89 89 691


# மரண அறிவித்தல்



மலர்வு 15 - 03 - 1939

உதிர்வு 21 - 04 - 2024

## வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை

கரணவாய் கல்லுவம் மேற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் இலகடி அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை அவர்கள் 21.04.2024 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை - இளையாச்சி தம்பதியினரின் பாசமிகு மகனும் செல்லையா - செல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற அன்னபூரணம் அவர்களின் பாசமிகு கணவரும் கஜேந்திரன்(லண்டன்), நிவேதா(லண்டன்), தர்மினி (சுவிஸ்), ரமணன், மைதிலி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிறோசினி(லண்டன்), காலஞ்சென்ற அகிலன்(லண்டன்) மற்றும் சிவகுமார்(சுவிஸ்), காந்தரூபி, தயாபரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் கௌதமன், ஜெனோசன், கோபிகன்(லண்டன்), அகிலாஷ், சஞ்சிவ்(சுவிஸ்), சாருஜன், சுபிட்சா, பானுஜன்(லண்டன்), விஷால்(லண்டன்) தீபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.04.2024 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் இலகடி அல்வாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

ரமணன் - 077 897 9106

(C-0186)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர்பாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டும்

## அரசியல் கட்சிகளிடம் கரு ஜெயசூரிய கோரிக்கை

**(கொழும்பு)**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகளின் நிலைப்பாட்டைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூற வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் மீண்டும் கருத்து வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நீண்டகாலமாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதுதொடர்பில் பதவிக்கு வருவதற்கு முன்னதாக அனைத்து வேட்பாளர்களும் வாக்குறுதிகளை அளிக்கின்றபோதும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் அம்முறையை நீக்குவது தொடர்பில் கரிசனைகளை வெளிப்படுத்துவதில்லை.

இவ்வாறான நிலையில் இந்தாண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. நாம் நாடளாவிய ரீதியில் உள்ள சமூகக் குழுக்களுடன் உரையாடல்களைச் செய்து வருகின்றதன் அடிப்படையில் அனைத்தின சமூகங்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களை கொண்டிருப்பது புலப்படுகின்றது.

அந்தவகையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்கள் மக்களின் ஆணையைப் பெறுவதற்கு முன்னதாக தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், அதற்கான கால வரையறை உள்ளிட்ட விடயங்களை வெளியிட வேண்டும்.

அதன் மூலமாக மக்கள் ஆணைபெற்று வருபவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைய நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நாம் சிவில் அமைப்பாக இருப்பதன் காரணமாக, அவ்விதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றபோது, அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

# ஈரான் ஜனாதிபதி வருகை நிச்சயம்

## உறுதியளித்தார் அலிசப்ரி



(கொழும்பு)

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு எம்மால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு இதுவரையில் எவ்விதமான மறுப்பும் வெளியிடப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவருடைய வருகைக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஈரானின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொள்வதற்கு ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு இலங்கை அரசாங்கத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இஸ்ரேல், ஈரான் இடையே போர்ப்பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தின் சாத்தியப்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கை அரசாங்கமானது அணிசேராக் கொள்கையுடன் அனைத்து நாடுகளுடனும் இருதரப்பு, பல்தரப்பு உறவுகளைப் பேணிவருகின்றது.

ஆகவே, ஈரான் ஜனாதிபதியின் வருகையினால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்று கரிசனைகளைக் கொள்ளவேண்டிய அவசியமில்லை"என தெரிவித்தார். (நி-6)

# கீதா கோபிநாத்-ஷெஹான் சேமசிங்க இடையே சந்திப்பு

(வோஷிங்டன்)

சர்வதேச நாணய நிதிய த்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத்துடன் இருதரப்பு கலந்துரையாடல் ஒன்றை மேற் கொண்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின் போது, பணவீக்கக் குறைப்பு, வருமான அதிகரிப்பு மற்றும்

நிர்வாக மறுசீரமைப்பு உள் ளிட்ட பல துறைகளில் ஏற்பட்டுள்ள நிலையான முன்னேற்றம் குறித்துத் இலங்கைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வ தேச இறையாண்மை கடன் பத்திரதாரர்களுடனான பேச்சுச் வார்த்தையில் சர்வதேச நாணய நிதியம் வழங்கிவரும் ஆதரவுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன்போது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். (நி-6)


# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 06, ஆள்காட்டி வளவு ஒழுங்கை, 50/15 ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் க.சோமசுந்தரமும் பெண் கனகம்மாவும் என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.
இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் பொன்னையா ஏரம்புவும், பொன்னையா செல்லையாவும், பொன்னையா இராசையாவும், பொன்னையா கிருஷ்ணசாமியும், பொன்னையா கைம்பெண் அன்னப்பிள்ளையும் 1967.02.10ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தில்லையம்பலம் குமாரசுவாமி முகதாவில் 12876ஆ ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் கைலாயபிள்ளை சோமசுந்தரம் பெண் கனகம்மா என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.
பின்னர் குறித்த ஆதனத்தை கயிலாசபிள்ளை சோமசுந்தரமும் பெண் கனகம்மாவும் 2014.08.22 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆதித்தன் கார்த்திகா முகதாவில் 416ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சண்முகலிங்கம் சிறீதரனுக்கும் பெண் வினோதினிக்கும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.
12876 ஆம் இலக்க உறுதியின் ஆதன அட்டவணையில் சொரியலாய் பத்தில் ஒன்பது பங்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் 416 ஆம் இலக்க உறுதியில் சொரியல் எனக் குறிப்பிடப்படவில்லை.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை தற்காலம் அரியாலை இறை, யாழ் மாநகரசபை வட்டாரம் 09, பிரதேச செயலகம் நல்லூர், கிராம சேவகர் பிரிவு J/96 "ஆத்திக்காட்டு வளவு" நிலப்பரப்பு 4,1/2 உம் வீடும் கிணறும் பயிர்வகைகளும். இந்நிலப்பரப்பு நான்கரைக்கும் எல்லை
கிழக்கு : சிவகடாட்சம் பெண் ஜெகதாம்பாளின் ஆதனம்
வடக்கு : பூரணாநந்தம் பெண் செல்லம்மாவின் ஆதனம்
மேற்கு : ஒழுங்கையும் இரத்தினசிங்கம் பெண் தங்கலட்சுமியின் ஆதனமும்
தெற்கு : அருள்வாசகம் பெண் சரஸ்வதியின் ஆதனம்
இதடங்கலும், மேற்படி கிணற்றில் வடக்குக் காணிக்குரிய பங்கும் மேற்கருகால் வழிவாய்க்கால் பாவிப்புரித்து புறநீங்கல்

தற்போது சண்முகலிங்கம் சிறீதரனும் பெண் வினோதினியும் இவ்வாதனத்தை தமது பெயரினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு தமது தத்துவகாரரான சோமசுந்தரம் திருக்குமார் மூலம் விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சண்முகலிங்கம் சிறீதரனும் பெண் வினோதினியும் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(சி-0184)

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெருங்கி வந்து; நெஞ்சம் தகர்ந்து

## ● பெங்களூரு அணி அதிர்ச்சித் தோல்வி
## ● ஓர் ஓட்டத்தால் கொல்கத்தா வெற்றி



பரபரப்பான ஐ.பி.எல்., லீக் போட்டியில் கொல்கத்தா அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் "திரில்" வெற்றி பெற்றது. கடைசி பந்து வரை போராடிய பெங்களூருவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இந்தியாவில் 17ஆவது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. கொல்கத்தாவில் நடந்த லீக் போட்டியில் பெங்களூரு - கொல்கத்தா அணிகள் மோதின.

**சால்ட் கலக்கல்**

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு பில் சால்ட் அதி ரடி ஆரம்பம் கொடுத்தார் பெர்குசன் ஓவரில் 28 ஓட்டங்கள் (6, 4, 4, 6, 4, 4) விளாசினார். சிராஜ் "வேகத்தில்" சால்ட்(48 ஓட்., 7 பவுண்டரி, 3 சிக்சர்) வெளியேறினார். யாஷ் தயாள் ஓவரில் நரைன்(10), ரகுவன்ஷி (3) ஆட்டமிழக்க, முதல் 6 ஓவர்களில் கொல்கத்தா அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை எடுத்தது. வெங்கடேஷ் (16) சோபிக்கவில்லை.

**கோலி கோபம் சரியா...**

கொல்கத்தாவின் ஹர்ஷித் ராணா "புல்டாசாக" வீசிய பந்தை (2.1வது ஓவர்), "கிரீசை" விட்டு வெளியே வந்து அடித்தார் ஹோலி. பந்து "ரொப் எட்ஜ்" ஆக... ராணா கச்சிதாக பிடித்தார். தனது இடுப்பு உயரத்திற்கு மேலே பந்து வீசப்பட்டதாக கருதிய ஹோலி, "நோ-போல்" எனக் கூறினார். கள நடுவர் "ரிவியு" கேட்டார். "டிவி" நடுவர் மைக்கல் காப் (இங்கி.,) சரியான அளவில்தான் பந்துவீசப்பட்டதாக அறிவிக்க, ஹோலி (18) கோபம் அடைந்தார். நடுவர்களுடன் வாதிட்டவாறு வெளியேறினார். ஹோலி "கிரீசிற்குள்" நின்று துடுப்பெடுத்தாயிருந்திருந்தால், பந்து அவரது இடுப்புக்கு கீழே தான் சென்றிருக்கும் என "போல் டிராக்கிங்" தொழில்நுட்பத்தில் தெரிந்தது.

**ஸ்ரேயாஸ் அரைச்சதம்**

அணித் தலைவர் ஸ்ரேயாஸ் பொறுப்பாக ஆடினார். ரிங்கு சிங், 24 ஓட்டங் கள் எடுத்தார். யாஷ் தயாள் ஓவரில் ரசல் ஒரு பவுண்டரி, ஸ்ரே யாஸ் ஒரு சிக்சர், பவுண்டரி அடிக்க, 22 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. அரைச்சதம் எட் டிய ஸ்ரேயாஸ் (50), கிரீன் பந்தில் வெளியேறினார். பின் ரசல், ரமன்தீப் சிங் மிரட்டினர். சிராஜ் ஓவரில் ரமன்தீப் 2 சிக்சர், 1 பவுண்டரி விளாசினார். கடைசி 5 ஓவர்களில் 73 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

20 ஓவர்களில் கொல்கத்தா அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களை எடுத்தது. ரசல்(27), ரமன் தீப்(24) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

**படிதார் விளாசல்**

கடின இலக்கை விரட்டிய பெங்களூரு அணிக்கு ஹோலியின்(18) சர்ச்சைக்குரிய "அவுட்" மனதளவில் பாதிப்பை ஏற் படுத்தியது. அணித் தலைவர் டுபிளசி (7) நிலைக்கவில்லை. வில் ஜாக்ஸ், ரஜத் படிதர் துணிச்சலாக போராடினர். ஜாக்ஸ், 29 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். சுயாஷ் ஓவரில் படிதார் 22ஓட்டங்கள் (4, 6, 6, 2, 4) விளாசினார். நரைன் பந்தை சிக்சருக்கு அனுப்பிய படிதார், 21 பந்தில் அரைச்சதம் கடந் தார். 11 ஓவர்களில் பெங்களூரு 2 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்கள் எடுத்து வலுவாக இருந்தது.

**திருப்பம் தந்த ரசல்**

போட்டியின் 12வது ஓவரை வீசிய ரசல், முதல் பந்தில் ஜாக்ஸ் (55), 4வது பந்தில் படிதாரை (52) அவுட்டாக்கி திருப்பம் ஏற்படுத்தினார். நரைன் வீசிய அடுத்த ஓவரில் கிரீன்(6), லாம்ரார்(4) வெளியேறினர். பிரபுதேசாய் 24 ஓட்டங்கள் எடுத்தார். ரசல் "வேகத்தில்" தினேஷ் கார்த்திக்(25) ஆட்டமிழந்தார்.

**"சிக்சர்" கரண் சர்மா**

கடைசி ஓவரில் பெங்களூரு வெற்றிக்கு 21 ஓட்டங்கள் தேவைப்பட்டன. "காஸ்ட்லி" வீரரான ஸ்டார்க் பந்துவீசினார். முதல் நான்கு பந்துகளில் கரண் சர்மா மூன்று சிக்சர்கள் பறக்கவிட, "டென்ஷன்" எகிறியது. 5ஆவது பந்தில் கரண் (20) ஆட்டமிழந்தார். கடைசி பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பெர்குசன்(1) ரன் அவுட்டாக, பெங்களூரு அணி 20 ஓவர்களில் 221 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து பரிதாபமாகத் தோல்வி அடைந்தது. (ம-7,10)

# குஜராத் அசத்தல் வெற்றி

## பஞ்சாப் கிங்ஷுக்கு தொடரும் ஏமாற்றம்

பஞ்சாப் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் அசத்திய குஜராத் அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. மொகாலியில் நடந்த லீக் போட்டியில் பஞ்சாப் - குஜராத் அணிகள் மோதின.

**கிஷோர் அபாரம்**



பஞ்சாப் அணிக்கு அணித் தலைவர் சாம் கர்ரான், பிரப்சிம்ரன் சிங் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. சந்தீப் வாரியர் வீசிய 2வது ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் உட்பட 21 ஓட்டங்கள் விளாசினார் பிரப்சிம்ரன். முதல் விக்கெட்டுக்காக 52 ஓட்டங்க்ள சேர்த்த போது மோகித் "வேகத்தில்" பிரப்சிம்ரன் (35) வெளியேறினார். ரஷித் கான் பந்தில் சாம் கர்ரான் (20) ஆட்டமிழந்தார். ரோசோவ் (9), லிவிங்ஸ்டன் (6) ஏமாற்றினர். சாய் கிஷோர் "சுழலில்" ஜிதேஷ் சர்மா (13), அஷூதோஷ் சர்மா (3), சஷாங்க் சிங் (8) சிக்கினர். மோகித் வீசிய 18ஆவது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி விரட்டிய பிரார், சாய் கிஷோர் வீசிய 19வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். இவர் 12 பந்தில் 29 ஓட்டங்கள் எடுத்து சாய் கிஷோரிடம் சரணடைந்தார். ஹர்பிரீத் சிங் (14) "ரன்-அவுட்" ஆனார்.

20 ஓவர்களில் பஞ்சாப் அணி 142 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது . ரபாடா (1) ஆட்டமிழக்காமல் இருந்தார். குஜராத் சார்பில் சாய் கிஷோர் 4 விக்கெட் சாய்த்தார்.

**கில் நம்பிக்கை**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய குஜராத் அணிக்கு சகா (13) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். ரபாடா பந்தில் வரிசையாக 2 பவுண்டரி விரட்டிய அணித் தலைவர் சுப்மன் கில் (35) நம்பிக்கை கொடுத்தார். டேவிட் மில்லர் (4) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய சாய் சுதர்சன் (31) ஓரளவு கைகொடுத்தார். அஸ்மதுல்லா ஓமர்ஜாய் (13) சோபிக்கவில்லை. அபாரமாக ஆடிய ராகுல் டிவாட்டியா, ரபாடா வீசிய 18 வது ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் உட்பட 20 ஓட்டங்கள் விளாசினார். ஹர்ஷல் படேல் "வேகத்தில்" ஷாருக்கான் (8), ரஷித் கான் (3) வெளியேறினர்.

அர்ஷ்தீப் சிங் வீசிய கடைசி ஓவரில் முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய டிவாட்டியா வெற்றியை உறுதி செய்தார்.

குஜராத் அணி 19.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. டிவாட்டியா (36) ஆட்டமிழக்காமல் இருந்தார். பஞ்சாப் சார்பில் ஹர்ஷல் படேல் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணம் – 2024

# சென்றலைட்ஸ் அணி

## 2ஆவது சுற்றுக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ணத் தொடரின் 12ஆவது போட்டி சென்றலைட்ஸ் அணிக்கும் ஜொலிஸ்ரார் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இப்போட்டியில் சென்றலைட்ஸ் அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 27.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் பிரியதரன் 22, சுகிர்தன் 11, சுபாரணன் 27, வாமணன் 28, தேதீஸ் 33, ரவி 11 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் நிரோஜன் 5.2 ஓவர்களில் 15 ஓட்டங்களைக் கொடுத்து 4, கௌதமன் 5 ஓவர்களில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 4 இலக்குகளை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கௌதமன் 31, சாரங்கன் 40, இந்துயன் 31, நிரோஜன் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் கோபிராம், வாமணன், விஷ்ணுசூரியம் 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLIIT NORTHERN UNI இன் மாணவர்கள் கௌரவிப்பு







(விளம்பர விவரணம்)

SLIIT NORTHERN UNI ஆனது வட மாகாணத்தில் முன்னணி கல்வி நிறுவனமாக திக ழ்வதோடு வடக்கு கிழக்கு மாணவர்களின் கல்வியியல் மற்றும் தொழில்வாண்மை அபிவிருத்திக்கான முழு முயற்சியையும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ள SLIIT NORTHERN UNI வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டங்களையும், கல்விக்கடன் வசதி களையும் யாழ்.கல்வி மேம்பாட்டு நிதியூடாக (YES Fund) வழங்கி வருகிறது. இவ் மேன்மை பங்கெடுப்பின் ஓர் அங்கமாக உயர்தரத்தில் மாவட்ட ரீதியில் சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களையும் SLIIT NORTHERN UNIயில் உயர் கற்றல் அடைவுகளை பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வுகளையும் MANA GE FEST எனும் பாடசாலை மாணவர்களுக்கான நுண்ணறிவு போட்டிகளையும் நடத்தி வருகிறது.

அதன்படி எமது Chairman இந்திரகுமார் பத்மநாதன் அவர்களால் யாழ்.இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாவட்ட ரீதியில் உயர்தரத்தில் முதலிடத்தை பெற்ற உயிரியல் மற்றும் கணித பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களான செல்வன். ஆனந்த ஜோதி வித்தியாசாகர், செல்வன். ஸ்ரீ பண்டகரன் சினேகன் ஆகியோருக்கும் சாதாரண பரீட்சையில் சிறப்பு தேர்ச்சி பெற்ற யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி அக்சயா ஆனந்தசயனன் அவர்களுக்கும், SLIIT NORTHERN UNI யில் சிறப்பு தேர்ச்சி எய்திய இரண்டாம் வருட மாணவன் செல்வன். முரளிதரன் பிரனீஷ் அவர்களுக்கும் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

அத்துடன் உயர்தர பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்ற கிளி/முழங்காவில் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த செல்வி. குபேந்திரன் துஷாமினி அவர்களுக்கும், SLIIT NORTHERN UNI ஆல் நிகழ்த்தப்பட்ட MANAGE FEST நுண்ணறிவுப் போட்டிகளில் பங்கு பற்றி முதலிடத்தைப் பெற்ற மாணவி வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி.சண்முகி கருணாநிதி அவர்களுக்கும் நான்கு வருட பட்டப்படிப்பை SLIIT NORTHERN UNI யில் தொடர்வதற்கான புலமைப்பரிசில் வசதியும் அவரின் சிறப்பு தேர்ச்சிக்கான கௌரவிப்பும் வழங்கப்பட்டது. அத்துடன் அப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பும் வழங்கப்பட்டது.

# யாழில் இடம்பெற்ற விழிப்புணர்வு நடைபவனி



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையின் அபிவிருத்திப் பணியினை முன்னிட்டு நடை பவனி நேற்று இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை மருத்துவமனை நோயாளர் விடுதி ஒன்றை கட்டுவதற்கான நன்கொடைகளை கொடையாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான விழிப்புணர்வின் நிமித்தமும் மக்களுக்கான சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தலும் முகமாக குறித்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது. இவ் நடைபவனி யாழ்.போதனா மருத்துவமனையில் காலை 6 மணியளவில் ஆரம்பித்து பண்ணை வீதி வழியாக ஊர்காவற்றுறை மருத்துவமனையை வந்தடைந்தது.

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையும் யாழ்.போதனா மருத்துவமனையும் இணைந்து ஏற்பாடு செய்த நடைபவனியில் வடமாகாணப் பிராந்திய சுகாதார பணிமனை மற்றும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிமனை என்பன கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# சித்திரா பூரணை விரதம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை வழமை போல் சிறப்பாக நடைபெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (நி-6)

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சித்திராப் பூரணை விரதத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு மூல மூர்த்திக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ [illegible] குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 70 | 120-150 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 140 | 150 | 180 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 110 | 100-120 | 150 |
| தக்காளி | 100 | 80 | 60 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 | 150 |
| கோவா | 150 | 160 | 140 | 200 | 250 |
| கரட் | 300 | 300 | 300 | 280 | 350 |
| பூசணி | 120 | 140 | 80 | 120 | 140 |
| புடோல் | 100 | 200 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 60 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 250 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 280 | 250 | 300 |
| பாகற்காய் | 500 | 300 | 250 | 500 | 300 |
| வெண்டக்காய் | 100 | 120 | 50 | 150-200 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 130 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 200 | 180 | 200 | 150 |
| லீக்ஸ் | 350 | 200 | 220 | 200 | 300 |
| பீற்றூட் | 200 | 150 | 150 | 220 | 300 |
| கறிமிளகாய் | 300 | 250 | 150 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 350 | 400-1000 | 800 |
| போஞ்சி | 150 | 300 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 50 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 60 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 800 | 400 | 400 | 600-900 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 100 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 300 | -- | 400 |
| வெங்காயப்பூ | -- | 200 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 50 | 90 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

**ஜாதகர்**

துலா ராசியின் அதிபதி சுக்கிரன். இந்த குரோதி புது வருடத்தில் சுக்கிரன் உச்சமாகியுள்ளார். ஆனாலும் அவர் 6 ஆம் இடம் எனும் மறைவு ஸ்தானத்தில் உச்சம். அதனால் ஏது பயன் என எண்ணுவீர்கள். அதில் இன்னொரு நன்மை கிடைக்கிறது.

சுக்கிரன் உங்களின் 8ஆம் அதிபதியாக 6 இல் மறைவு. எனவே, அங்கு ஒரு விபரீத ராஜ யோகம் வந்து ராசியாதிபதியை பலப்படுத்துகிறது. எனவே இந்த வருடம் துலா ராசியினர் எந்த இன்னல் வந்தாலும், அதை எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள்.

**தனம்**

இந்த வருடம் வருமானத்திற்கு குறைவிருக்காது. உங்கள் வருமானத்திற்குரிய அதிபதியும், யோகாதிபதியும் ஒன்றுகூடி குதாகலிக்கிறார்கள். அதீத வருமானம் கிடைக்கும்.

**வாக்கு:** நல்ல காலத்திலேயே வெடுக் வெடுக்கென்று பேசுவீர்கள். இப்போது கையில் பணப்புழக்கம் வேறு அதிகமாகி இருக்கிறது. பேச்சில் கடுமையும், குத்தலும், நக்கலும் இழையோடி இணைந்து எதிரில் இருப்பவரை அழவைத்து விடும்.

**குடும்பம்:** உங்கள் குடும்பத்தில் நிறைய சுப விடயங்கள் நடக்கும். அதனால் குடும்ப மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. இதனால் உங்கள் வீட்டிற்கு திருஷ்டி ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்வப்போது திருஷ்டி கழித்து விடவும்.

**சகோதரம்**

உங்கள் இளைய சகோதரரும், நிறைய உதவி, நன்மைகள், ஒத்தாசை என இவை செய்தாலும், அதனால் உங்களுக்கு



துலாம்

எதிர்பாராத இம்சையே ஏற்படும். உங்களுக்கு அரசு சார்ந்த ஒப்பந்தம் கிடைக்கும். அதில் சின்ன இடையூறும் ஏற்படும். உங்கள் பணியாளர்கள் நன்கு வேலை செய்தாலும், அவ்வப்போது ஏழரையை இழுத்துவிட்டு விடுவர்.

**வீடு**

உங்களில் சிலர் மனையுடன்கூடிய வீடு கட்டுவீர்கள். சிலர் வாரிசுகளின் உதவியுடன் வீடு வாங்க இயலும். சிலர் பூர்வீக மனையை விற்று, வீடு வாங்க முதலீடு செய்வீர்கள்.

சிலர் பழைய வீட்டை வாங்கி புதுப்பித்துக் கொள்வீர்கள். வேகமும், புதுமையும் மிகுந்த வாகனம் வாங்குவீர்கள். உங்களில் தாயார் பாதவலி அல்லது வயிற்று வலியால் சிரமப்பட நேரிடும். மாணவர்களின் கல்வி சீராகவே அமையும்.

**நோய்**

நோய் சின்னதாக தெரியும் போதே உடனே மருத்துவரிடம் சென்று விட வேண்டும். ஏனெனில் இவ் வருடம் நோய் பெருக்கம், வியாதி அதிகரிப்பு தென்படுகிறது. சின்ன வலியையும் அலட்சியம் செய்யக்கூடாது.

**திருமணம்**

இந்த வருடம் திருமணம் வேண்டுவோருக்கு திருமணம் நடக்கும்.

அது காதல் அல்லது கலப்பு கல்யாணமாக அமையும்.

**எதிர்பாராத இடையூறு**

இந்த வருட கிரக அமை



ப்புபடி வரும் துன்பங்கள் சூரியனைக்கண்ட பனி போல் நீங்கி மறைந்து விடும். ஏற்றுமதி, இறக்குமதியில் நீங்கள் ஈடுபட்டிருந்தால், அதன் தரவுகளை கவனமாக கையாளவும்.

**அதிர்ஷ்டம்**

உங்கள் வேலையில் நல்யோகம் கிடைக்கும். உங்களில் பலர் வெளிநாட்டு வேலை கிடைக்கப் பெற்று அதிஷ்ட வாய்ப்பு பெறுவர். சில சேவை உங்களுக்கு அதிஷ்டத்தை அழைத்து வரும். யோகம் சில தடங்கல்களுடன் வந்து சேரும். வெளிநாடு செல்லும்போது சிற்சில வாக்கு வாதங்கள் ஏற்படவாய்ப்புண்டு.

**தொழில்**

இந்த வருடம் தர்மகர் மாதிபதி யோகம் கிடைக்கிறது. எனவே தொழில் மிக எளிதாக ஏற்றம் காணும். தொழிலில் வெளி நாட்டு சம்பந்தம் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சியால் உங்கள் அந்தஸ்து பெருகும்.

**விரயம்**

இந்த வருடம் வேலை, தொழில் எல்லாமே ரொம்ப அலைச்சலைத் தரும்.

எனினும் நீங்கள் கொஞ்சம் புத்திசாலித் தனமாக அலைச்சலை மற்றவருக்கு பகிர்ந்து கொடுத்துவிடுவீர்கள். அல்லது இந்த இடத்தில் இருந்தே கமப்யூட்டர், கைபேசிமூலம் பாதி வேலையை முடித்துவிடுவீர்கள்.

**பரிகாரம்**

செவ்வாய்+ சனி சேர்க்கைக்கு வெள்ளிக் கிழமை வெண் தாமரை பூமாலை,தேன் கலந்த பேரிச்சம்பழம் மற்றும் அகல் விளக்கில் சிகப்பு நிற துணியில்24 மிளகை மூட்டை கட்டி தேங்காய் எண்ணெய் ஊற்றி சிகப்பு திரிபோட்டுதீபம் ஏற்றவும்.

ஏழ்மையானவரின் திருமணத்திற்கு முடிந்த உதவி செய்யுங்கள். துலா ராசிக்கு 80% மார்க் போடலாம்.

(தொடரும்)

---

# இராசிபலன்

22.04.2024
சித்திரை 09, திங்கட்கிழமை,
சதுர்த்தசி பின்னிரவு 4.09 மணிவரை

அத்தம் முன்னிரவு 8.40 மணிவரை
சுபநேரம்-12.01-1.31 மணிவரை
இராகுகாலம்-7.31-9.01 மணிவரை

சந்திராஷ்டமம்.
திருவோணம், அவிட்டம்.

வளவன்



**மேஷம்**

கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும்,நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.



**கடகம்**

நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.



**துலாம்**

புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.



**மகரம்**

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோககியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.



**ரிஷபம்**

அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



**சிம்மம்**

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும், ஆடம்பரப்பொருட்களில் நாட்டம் கூடும்.



**விருச்சிகம்**

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.



**கும்பம்**

மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.



**மிதுனம்**

வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்,இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



**கன்னி**

குடும்பத்தினருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.



**தனுசு**

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



**மீனம்**

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

விளம்பரத்தை [illegible] பெரும்பாலும் கதைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவ்வாண்டு தன் பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் எத்தனையோ இடர்ப்பாடுகளைத் தாண்டி இப்பல்கலைக்கழகம் இன்று 11 பீடங்களையும் 12 000 இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் கொண்டு நாட்டின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி, மருதனார்மடம், கைதடி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் பீடங்களைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்த வவுனியா வளாகம் இன்று தனிப்பல்கலைக்கழகமாக விளங்குகின்றது. இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இப் பல்கலைக்கழகம் நாட்டின் தேசிய பல்கலைக்கழகமாகவும், அதே நேரம் பரமேஸ்வராக் கல்லூரி நிறுவுனர் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் அபிலாசைகளை நிறைவேற்றும் மற்றும், வடபகுதியின் அபிவிருத்தியில் பெரும்பங்கு வகிக்கும் உயர்கல்வி நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைந்ததற்கும், துரித மேம்பாடு அடைந்ததற்கும் இப்பிரதேசத்தின் நீண்டகாலக் கல்விப் பாரம்பரியமே அடிப்படைக் காரணமாகும். இங்கு மரபுவழித் தமிழ்க் கல்விச் செயற்பாட்டுடன் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிறிஸ்தவ சபைகளால் ஆங்கில மொழிப் பாடசாலைக் கல்வியும் வளர்ச்சி பெறலாயிற்று. இப்பின்புலத்தில் 1823 இல் வட்டுக்கோட்டை செமினரியிலும், மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்திய சாலையிலும் கலை, மருத்துவப் படிப்புக்கள் இடம்பெற்றதாக அறிய முடிகின்றது. மேலும் 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தமிழ் அறிஞர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, கரோல் விசுவநாத பிள்ளை ஆகியோரின் கல்விப் பணிகள் இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு மேலும் வலுச்சேர்த்தன.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோப்பாய், திருநெல்வேலி, கொழும்புத்துறை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, நல்லூர், பலாலி ஆகிய இடங்களில் ஆசிரிய பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்றன. இவ்வாசிரிய கலாசாலைகளில் பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு நாடு தழுவிய நிலையில் ஆசிரிய நியமனம் பெற்றனர். 1961 இல் அரசாங்கம் தனியார் பாடசாலைகளையும், ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளையும் பொறுப்பேற்றபொழுது கோப்பாய், நல்லூர், திருநெல்வேலி, கொழும்புத்துறை, பலாலி ஆகிய கலாசாலைகள் மாத்திரமே இயங்கின. ஏனைய கலாசாலைகள் 1940 களில் மூடப்பட்டுவிட்டன.

மேலும் யாழ்ப்பாண நகரில் சில காலம் இந்துக்கல்லூரியிலும், மத்திய கல்லூரியிலும், சென்னை, கல்கத்தாப் பல்கலைக்கழகங்களின் பட்டப்படிப்புக்கள் நடைபெற்றதாக அறிய முடிகின்றது. யாழ்ப்பாணக் கல்லூரியில் இலண்டன் பல்கலைக்கழக வெளிவாரிப்படிப்பு இடம் பெற்றிருந்தது. மேலும் இங்கு 1960 இற்குப் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் படிப்பு வகுப்புக்கள் 1974 வரை இடம்பெற்றிருந்தன.

1940கள், 1950களில் பெரும் எண்ணிக்கையான யாழ்ப்பாண மாணவர்கள் எஸ்.எஸ்.சி வகுப்பில் சித்திபெற்ற பின்னர் சென்னை, மதுரை, திருச்சி, பாளையம் கோட்டை, அண்ணாமலை, பெங்களூர், மைசூர், கல்கத்தா, பெனாரிஸ், போன்ற நகரங்களிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரிகளில் இணைந்து படித்து பட்டதாரிகளானார்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரிய சேவையில் இணைந்தனர். 1961 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் இந்திய ஆசிரியர்கள் பலர் கல்விப் பணியில் ஈடுபட்டு இப்பகுதியின் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கு வழிசமைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்குறிப்பிட்ட இறுக்கமான செய்திகள் எமது பிரதேசத்தின் நீண்டகாலக் கல்விப் பாரம்பரியத்தைக் குறிக்கும் சுட்டிகளாகும்.



01

தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தி தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் 1956 இல் ஆரம்பிக்கப்பட்டது.

சேர் வைத்திலிங்கம் துரைசாமி அந்த இயக்கத்தின் தலைவராகவும் திரு.பிறிட்டோ மதுரநாயகம், பேராசிரியர். பி.கே.சண்முகம், தி.குரெசெட் தம்பையா, பேராசிரியர் எலியேசர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, திரு.எம்.எம்.ஐ. காரியப்பர், பேராயர் சபாபதி குலேந்திரன், பேராசிரியர் எ.டபிள்யு.மயில்வாகனம், பேராசிரியர் எ.சின்னத்தம்பி, மாவட்ட நீதிபதி பி.சிறீஸ்கந்தராசா, மருத்துவக் கலாநிதி எஸ்.சுப்பிரமணியம், வணபிதா [illegible] திருச்செல்வம், [illegible] திரு.எஸ்.எஸ்.பி. வைத்திலிங்கம் ஆகியோர் துணைத்தலைவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுச் செயலாளராகச் சட்டத்தரணி ரி.இராஜதுரையும், பொருளாளராக இலங்கை வங்கி முகாமையாளர் ரி.எஸ்.முத்துலிங்கசாமியும் தெரிவுசெய்யப்பட்டனர். (சபா ஜெயராசா 2020-2024).

இப்பல்கலைக்கழகம் திருகோணமலையில் அமையவேண்டும் எனக் கூறி அதற்காக இவ்வியக்கம் 1000 ஏக்கர் நிலத்தையும் அங்கு வாங்கியது. மேலும் வெள்ளவத்தை அலெக்சாண்டரியா வீதியில் நாவலர் மண்டபத்தில் சில உயர்கல்விக் கற்கைகளுக்கு வகுப்புக்களையும் நடாத்தியது. இதுவே தந்தை செல்வநாயகத்தின் தலைமையிலான தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடாகவுமிருந்தது.

1958இல் அன்றைய பிரதமர் திரு.S.W.R.D பண்டாரநாயக்கா வித்தியோதய, வித்தியலங்கார பிரிவெனாக்களைப் பல்கலைக்கழகங்களாகத் தரம் உயர்த்திய நிலையில் யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகத்தை அமைக்க முன்வந்தார். இதனை அன்றைய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆதரித்த பொழுதும் தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் தமிழ்ப் பல்கலைக்கழகமே வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்ததால் கடைசியில் ஒரு பல்கலைக்கழகமும் வரவில்லை.

இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி பற்றி 1959இல் ஆராய்ந்த நீதாம் (Needham) தனது அறிக்கையில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் எனச் சிபாரிசு செய்து அது அமையுமிடத்து, குளிரூட்டி வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

1970ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய இடதுசாரி முன்னணி பெருவெற்றி பெற்று ஆட்சியமைத்தது. இக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகமும் பல வளாகங்களும் இருந்தால் போதுமென்றும், இலங்கையின் வடக்கு, தெற்கு, கிழக்குப் பகுதிகளில் புதிய வளாகங்கள் அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 1972 பல்கலைக்கழகச் சட்டத்தின் பின்புலத்தில் அன்றிருந்த பல்கலைக்கழகங்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களாக மாற்றப்பட்டன.

1970 களின் ஆரம்பத்தில் அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் மாவட்டக்கோட்டா முறையையும், மொழி வழித்தரப்படுத்தலையும் அறிமுகம் செய்தது. இம்மாற்றங்களால் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெரும் போராட்டத்தில் இறங்கினர். இச்சூழ்நிலையில் அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போலவே யாழ்ப்பாணத்தில் ஒரு வளாகத்தை அமைக்கத் தீர்மானித்தது. அன்றைய சூழ்நிலையில் புதிதாகக் கட்டடங்களை அமைக்காது சேர் பொன்னம்பலம் இராமநாதனால் அமைக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியையும் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புப் பிரிவையும் எடுத்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தை அமைக்க முற்பட்டது.

யாழ்ப்பாண வளாக அமைப்பை ஒரு பிரிவினர் ஆதரிக்க, இன்னோர் பிரிவினர் கடுமையாக எதிர்த்தனர். இடது சாரிகளும், நடைமுறைச் சாத்தியக் கருத்துக்கள் கொண்டவர்களும் வளாக அமைவை ஆதரித்தனர். இவர்களின் நிலைப்பாட்டில் வளாகம் ஆரம்பத்தில் சிறிதாக இருப்பினும் படிப்படியாகப் பல்வேறு புதிய பீடங்கள் உருவாக்கப்பட்டு கால ஓட்டத்தில் இது வளர்ச்சிபெறும் எனக் கூறப்பட்டது. மேலும் பரமேஸ்வராக் கல்லூரி நிறுவுனர் இக்கல்லூரி ஒரு காலத்தில் பல்கலைக்கழகமாக உயரும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார் என்றும் கூறப்பட்டது. அன்று கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைந்து சென்ற நிலையில் இதனை வளாகமாக மாற்றுவதால் அயற்பகுதிப் பிள்ளைகளுக்குப் பாதிப்பு ஏற்படாதெனவும், வளாகம் அமைவதால் திருநெல்வேலிப் பகுதி வளர்ச்சிபெறும் எனவும் வாதிக்கப்பட்டது. இதேபோல் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப் படிப்புப் பிரிவும், நூலகமும் அமையவிருக்கும் வளாகத்திற்கு அனுசரணையாக இருக்குமென்றும் அன்றைய வட்டுக்கோட்டை M.P திரு தியாகராசா அழுத்தம் கொடுத்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# நேருக்கு நேர் மோதி விழுந்த ஹெலிகொப்டர்கள்

8 பேர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்



(டோக்கியோ)

ஜப்பானில் 2 கடற்படை ஹெலிகொப்டர்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளானது. இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

பசுபிக் பெருங்கடல் பகுதியில் சீனாவின் தொடர் அத்துமீறல்கள் காரணமாக ஜப்பான் தனது கடலோர பாதுகாப்பை அதிகரித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக தொடர் பயிற்சிகளில் அந்நாட்டு இராணுவம் மற்றும் கடற்படை ஈடுபட்டு வருகிறது. நேற்று முன்தினம் இரவு நாகசாகி கடற்படைத் தளத்திலிருந்து வந்த ஹெலிகொப்டரும், டொகுஷிமா கடற்கரை தளத்திலிருந்து வந்த ஹெலிகொப்டர் ஒன்றும் இரவு நேர பயிற்சியில் ஈடுபட்டிருந்தன.

நீர்மூழ்கி கப்பல்களைக் கண்டறியும் குழுவைச் சேர்ந்த இந்த நவீன ரக ஹெலிகொப்டர்களில் 8 வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அந்நாட்டு நேரப்படி இரவு 10:38 மணியளவில் இரண்டு ஹெலிகொப்டர்கள் உடனான தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இதையடுத்து உடனடியாக மீட்புப் படையினர் கடற்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது ஒரு ஹெலிகொப்டரின் பாகங்கள் மட்டும் கடலில் மிதந்தது தெரியவந்தது.

இதனால் இரண்டு ஹெலிகொப்டர்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்கு உள்ளாகியிருக்கலாம் என இராணுவத்தினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். ஹெலிகொப்டரில் பயணித்த ஒருவரது உடல் மட்டும் மீட்கப்பட்டுள்ள நிலையில் மாயமான 7 பேரைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அவர்கள் 7 பேரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதால், பலி எண்ணிக்கை 8 ஆக உயரக் கூடிய வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது. (நி-6)

# சீன நிறுவனங்களுக்கு தடை விதித்த அமெரிக்கா



(வோஷிங்டன்)

3 சீன நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானுக்கு ஏவுகணை தொழிநுட்பங்களை இரகசியமாக வழங்கியமைக்காக இந்த தடையை அமெரிக்கா விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் நட்பு நாடான சீனா பிரதானமாக ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு பொருட்களையும் வழங்கி வருகின்றது.

இந்நிலையில் குறித்த நிறுவனங்கள் பாகிஸ்தானுக்கு நீண்ட தூர ஏவுகணைகளை வழங்கியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அதன்படி சீனாவைச் சேர்ந்த 3 நிறுவனங்களுக்கு எதிராகவே அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது. (நி-6)

# அணுமின் நிலையங்க

# மூன்றாம் உலகப் போ

## நிபுணர்கள் எ

(வோஷிங்டன்)

**இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கிடையிலான மோ மூன்றாம் உலகப்போராக வெடிக்குமா என்ற அச்ச நாடுகளுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள நிலையில் ஈ அடுத்த திட்டம் தொடர்பில் நிபுணர்கள் பலர் கரு களைத் தெரிவித்துள்ளனர்.**

ஏப்ரல் 13 ஆம் திகதி இரவில் ஈரான், இஸ்ரேல் மீது 300 இற்கும் அதிகமான ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நிகழ்த்தியது. எனினும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா உதவியுடன் இஸ்ரேல் அந்த ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அதிகாலை ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் பெரிய அளவில் சேதம் எதுவும் ஏற்படவில்லையென்றாலும், அதில் ஒரு முக்கியத்துவம் உள்ளது.

அதாவது தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் அணுமின் நிலையங்கள் காணப்படுகின்றமையால் ஈரானின் அணுமின் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்த இஸ்ரேல் நடத்திய ஒரு ஒத்திகையாக அது இருக்கலாம் என கருதப்படுகிறது.

அந்தவகையில் இஸ்ரேல் ஈரானுடைய அணுமின் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்துமானால், அது பெரிய போருக்கு வழிவகுக்கும் என்பதுடன் அணு ஆயுதப் போராகக் கூட வெடிக்கலாம் என நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை ஈரான் நேரடியாக தாக்குதலில் ஈடுபடாமல் தனது ஆதரவாளர்களான

# இராணுவ உதவிக்கு ஒப்புதல் அளித்த

## இஸ்ரேல் பிரதமர், உக்ரைன் ஜனாதிப



(டெல்அவிவ்)

இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே சில வாரமாகவே மோதல் போக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் போருக்கான பதற்ற நிலை நீடித்து வருகிறது.

ஈரான் சில மாதங்களில் அணு ஆயுதங்களைக் கட்டமைக்க உள்ளது என இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் குற்றம்சாட்டின.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஈரான், நாங்கள் தற்போது மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், அமைதிக்காகவும் குடிமக்களின் நன்மைக்காகவும் என தெரிவித்துள்ளது.

ஈராக் நாட்டின் மத்திய பகுதியில் அமைந்த இராணுவ தளத்தின்மீது இரவோடு இரவாக இஸ்ரேல் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியது. இந்த தளத்தில் இராணுவ வீரர்கள், ஈரான் ஆதரவு பெற்ற துணை இராணுவப் படையினர் தங்கி உள்ளனர்.

இஸ்ரேல், ஈரான் நாடுகளுக்கு இடையே போர் மூள்வதற்கான சூழல் காணப்படும் சூழலில் இது 3 ஆவது உலகப்போருக்கு வழி வகுக்குமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.


இதற்கிடையே இஸ்ரேலின் "அயர்ன் டோம்" வான் பாதுகாப்பு அமைப்பு உட்பட இஸ்ரேல் இராணுவத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அமெரிக்க அரசு இஸ்ரேல் நாட்டிற்கு 13 பில்லியன் மதிப்பிலான இராணுவ உதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நிலையில் இராணுவ உதவிக்கு ஒப்புதல் அளித்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள் மீதான தாக்குதல்
# போருக்கான நகர்வு
## எச்சரிக்கை

மோதல்
சும் உலக
ஈரானின்
கருத்துக்



ஆயுதக்குழுக்கள் மூலம் பயங்கர தாக்குதலில் ஈடுபடலாம் எனவும் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

ஈரானுக்கு பாலஸ்தீனத்தின் ஹமாஸ், லெபனானின் ஹிஸ்புல்லா, ஏமனின் ஹவுதிக்கள் மற்றும் ஈராக்கிலுள்ள சில குழுக்கள் என பல ஆயுதக் குழுக்களின் ஆதரவு உள்ளது.

எனவே, இந்த ஆதரவுக்குழுக்கள் இஸ்ரேல் மீது பயங்கர தாக்குதல் நிகழ்த்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக மத்திய கிழக்கு நாடுகளில் ஒரு பெரிய போர் வெடித்து அது மூன்றாம் உலகப்போராக மாறவும் வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் ஊகிக்கின்றனர்.

மேலும் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பு, காசாவில் இஸ்ரேலுடன் இரண்டாவது பயங்கர மோதலுக்குத் தயாராக இருப்பதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

தற்பொழுது கச்சா எண்ணெய் விலையும் தங்கம் விலையும் உயர்ந்து வருவதாக தகவல் வெளியாகி வரும் நிலையில், இஸ்ரேல் எடுக்கும் முடிவு ஈரானை மட்டுமல்ல, உலக நாடுகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

# அமெரிக்காவில் மீண்டும் உயிரை பறித்த ப்ளூ வேல் சவால்
## பலியான இந்திய மாணவன்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ப்ளூ வேல் சவாலை எதிர்கொண்ட இந்திய மாணவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் 20 வயதுடைய இந்திய இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞர் தற்கொலை ஆட்டம் எனப்படும் ப்ளூ வேல் சவாலை எதிர்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸ் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

ரஷ்யாவில் இருந்து உருவான இந்த ப்ளூ வேல் சவால் மிக மோசமான கொடூரமான கட்டங்களை கொண்டதாகும். 50 நாட்கள் முன்னெடுக்கப்படும் இந்த சவாலானது இறுதியில் தற்கொலையில் முடிக்கப்படுகிறது.

முதல் நாள் நள்ளிரவில் கண் விழிக்கச் சொல்வதும் அல்லது அவர்கள் பரிந்துரைக்கும் மிக மோசமான திரைப்படம் ஒன்றை அவர்கள் குறிப்பிடும் நேரத்தில் பார்க்கச் செய்வதும் சவாலாக அளிக்கப்படுகிறது.

அதன் பின்னர் மிக ஆபத்தான அல்லது மிகவும் கொடூரமான கட்டங்களை கொண்டுள்ளது இந்த ப்ளூ வேல் சவால். இதன் இறுதி கட்டத்தில் அதுவரை மூளைச்சலவை செய்யப்பட்ட நபரை தற்கொலைக்கு தூண்டுவதே கடைசி சவாலாக பார்க்கப்படுகிறது.

இது மட்டுமின்றி இந்த சவால்களை எதிர்கொள்ளும் நபரை மிரட்டி அச்சமடைய செய்து அல்லது உளவியல் ரீதியாக பணிய வைத்து ஒவ்வொரு சவாலையும் மேற்கொள்ள வைக்கின்றனர்.

பொதுவாகவே நீலத் திமிங்கிலங்கள் தங்கள் எல்லைகளை சுயமாகவே மீறிச் சென்று இறுதியில் சாவை எதிர்கொள்ளும் குணம் கொண்டவை. இதன் அடிப்படையிலேயே இந்த கொடூர சவால்களுக்கும் ப்ளூ வேல் என பெயரிடப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

2019 ஆம் ஆண்டில் முதல் முறையாக நூற்றுக் கணக்கான தற்கொலைக்கு பின்னணியில் இந்த ப்ளூ வேல் சவால் உறுதி செய்யப்பட்டது. ரஷ்யாவில் தொடங்கி உக்ரைன், அமெரிக்கா மற்றும் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் இது வியாபித்தது.


கடந்த 2015 நவம்பர் 22 ஆம் திகதி பலென் கோவா என்ற ரஷ்ய இளம் பெண் இணையத்தில் தமது புகைப்படம் ஒன்றை பதிவு செய்ததுடன் மறுநாள் அவர் தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியானது. இவரே ப்ளூ வேல் சவாலுக்கு முதல் பலி என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# த அமெரிக்கா
## பதி வரவேற்பு



அமெரிக்க செனட் சபைக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஆகியோர் நன்றி தெரிவித்தனர். இதனால் இஸ்ரேல், ஈரான் இடையிலான போர் பதற்றம் தணிவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. (நி-6)

# சீனாவில் 324 பெட்டிகளைக் கொண்ட சரக்கு ரயில் சேவை ஆரம்பம்



(பீஜிங்)

சீனாவின் மிகப்பெரிய சரக்கு ரயில் சேவையான ஷீஜோ-ஹீவாங்குவாவின் சோதனை ஓட்டம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக இடம்பெற்றது.

324 பெட்டிகளைக் கொண்ட இந்த ரயிலானது சுமார் 4 கிலோ மீற்றர் நீளம் கொண்டது எனவும் இதில் 4 மின்சார என்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரே நேரத்தில் 30 ஆயிரம் தொன் நிறை கொண்ட பொருட்களை குறித்த ரயில் மூலம் சுமந்து செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ரயிலானது ஷாங்சி மாகாணத்தில் உள்ள நிலக்கரித் தளத்தையும் ஹெபே மாகாணத்தில் உள்ள ஹீவாங்குவா துறைமுகத்தையும் நேரடியாக இணைப்பதாகவும் இதனால் நாட்டின் வர்த்தகம் மேலும் வளர்ச்சியடையும் எனவும் சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி-6)

# 36 மணி நேரத்தில் 10 ஆயிரம் வரிகளில் கவிதை
## விஜய் ரசிகர் சாதனை

(சென்னை)

நடிகர் விஜய்யின் தீவிர ரசிகர் ஒருவர், விஜய்க்காக 10 ஆயிரம் வரிகளில் கவிதை எழுதி உலக சாதனை படைத்துள்ளார்.

திருப்பத்தூரைச் சேர்ந்த கதிர் (30) என்ற இளைஞரே குறித்த சாதனையைப் படைத்துள்ளார். இவர் 16 ஆம் திகதி காலை 11 மணிக்கு ஆரம்பித்து 17 ஆம் திகதி இரவு 11 மணி வரை மொத்தமாக 36 மணி நேரத்தில் சுமார் 10 ஆயிரம் வரிகள் அடங்கிய ஒரு முழு கவிதையை எழுதியுள்ளார்.

இவர் கேரள மாநிலம் பாலாக்காடு பகுதியில் இயங்கி வரும் யுனிவர்சல் அச்சீவர் புக் ஆப் ரெக்கார்ட் மற்றும் ப்யூச்சர் கலாம் புக் ஆப் ரெக்கார்ட் ஆகிய நிறுவனங்களின் தலைமையில் குறித்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதனையடுத்து கதிருக்கு குறித்த நிறுவனங்களால் இரண்டு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கதிரின் சாதனையை விஜய்யின் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெப்பகாலத்துக்கு உகந்த மூலிகை எண்ணெய்க் குளியல்




டொக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இந்த மருத்துவத்தில் மூலிகை எண்ணெய் குளியல் ஆரோக்கியத்தில் முக்கிய இடம் வகிக்கின்றது. மேலும் பல நோய் நிலைமைகளில் வெவ்வேறு இன மூலிகைகளை கலந்த எண்ணெய்க் குளியல் உடலை ஆரோக்கியமாகவும் பல நோய்களில் இருந்து பாதுகாக்கவும் உதவுகிறது. வெப்ப காலத்தில் இவ் எண்ணெய்க் குளியலை மேற்கொள்ளும் போது பல தோல் தொற்றுக்கள் ஏற்படாது பாதுகாப்பதுடன் உடலை குளிர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் பேண உதவுகின்றது. பொதுவாக நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பது நன்று. அல்லது நல்லெண்ணெயுடன் மிளகு, சீரகம் சேர்த்து காய்ச்சி பயன்படு த்தலாம். விளக்கெண்ணெய்/ ஆமணக்கெண்ணெயுடன் சிறிய வெங்காயத்தை சேர்த்து காய்ச்சியும் பயன்படுத்தலாம்.

வெய்யில் காலத்தில் உடற்சூடு கூடி இருக்கும் போது இந்த தைலம் சிறந்த பலனை கொடுக்கும். எண்ணெய் இட்டு குளிக்கும் போது உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை எல்லா இடங்களிலும் எண்ணெய் முழுமையாக பரவி இருக்க வேண்டும். உடலின் 9 துளைகளிலும் துளியாக எண்ணெய் விடல் வேண்டும். கண்ணில் 2, 3 துளிகளும் மூக்கில் 4 துளிகளும் காதுகளுக்கு 6 துளிகளும் விடல் வேண்டும். தலை, கால், பாதம், உள்ளங்கை ஆகிய இடங்களில் எண்ணெயினை மிகுதி யாக பயன்படுத்துதல் வேண்டும். உட லில் தேய்க்கும் போது சூடு ஏற்படக் கூடாது. உடலில் மிருதுவாக அழுத்தம் கொடுத்தும் விரல் நுனிகளால் தேய்த்தும் தசைப் பகுதியில் இலகுவாக தட்டி விட்டும் முதுகுத்தண்டுப் பகுதியில் உள்ளங்கையாலோ, பெரு விரலாலோ நீவி விட்டுக் எண்ணெய் தேய்க்க வேண்டும். எண்ணெய் இட்டு தேய்த்த பின்பு குறைந்தது 40 நிமிடங்களாவது ஊறவிடல் வேண்டும். அப்போது தான் முழுப்பயனும் கிடைக்கும். எண்ணெய் இட்டு குளிப்பதற்கு இளஞ்சூட்டு நீரையே பயன்படுத்த வேண்டும்.

கற்றாளை சாற்றுடன் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி பயன்படுத்தி னால் உடற்சூடு தனிந்து உடல் வலிமை உண்டாகும். இரவு உறக்கம் வரும். கண்சூடு, எரிச்சல், சிவப்பு மாறும். 100 ml அளவு நல்லெண்ணெய்க்கு 2 தேக் கரண்டி நற்சீரகம் சேர்த்து காய்ச்சி பயன்படுத்தினால் இரத்த அழுத்தம் குறையும். தலைச் சுற்று, மயக்கம் நீங்கும். கறிவேப்பிலை, பொன்னாங் காணி, கரிசலாங்கன்னி, மருதானி, நெல்லிக்காய், செம்பருத்தி, வெந்தயம் போன்ற மூலிகைகளை நல்லெண்ணெய்யுடன் கலந்து காய்ச்சி பயன்படுத்தினால் முடி பாதுகாக்கப்படுவதோடு கண் மற்றும் உடல் உறுப்புகள் வலிமை அடையும். எண்ணெய் இட்டுக் குளிக்கும் போது உடலை தூய்மைப்படுத்துவதற்கு சிகைக்காய் பொடி சிறந்தது. இதற்கு சிகைக்காய் பொடியும் பச்சைப் பயறுப் பொடியும் சம அளவு கலந்து சோறு வடித்த கஞ்சியுடன் நன்கு கலந்து பயன்படுத்தல்.

முடி கேடடையாமல் தூய்மை அடைவதற்கு சிகைக்காயுடன் பூவந்தி கொட்டை, புனலை விதை போன்றவற்றை கலந்தும் பயன்படுத்தலாம். எண்ணெய்க் குளியல் மேற்கொள்ளும் நாளில் அதிகம் புளிப்பு உணவை தவிர்த்தல் வேண்டும். பால், தயிர் தவிர்த்தல். மோர் பயன்படுத்தலாம். பகல் உறக்கம் தவிர்த்தல். எளிதில் செரிக்கும் உணவுகளை பயன்படுத்தல். நெய்யையும் உருக்கி பயன்படுத்தலாம். பஞ்சுக்காய்கள் சவரம் பருப்பு சிறந்தது. உடலில் இயல்பான இயக்கம் சீரடைவ தற்கு எண்ணெய்க் குளியல் உதவுகிறது. உடல் கட்டுக்களான சாரம், செந்நீர், ஊன், என்பு, கொழுப்பு, மச்சை, சுக்கிலம் ஆகியவற்றின் இயக்கம் எண்ணெய் குளியலில் மேம்படுகிறது. இந்த 7 உடற் கட்டுகளிலும் நுட்பமாக தங்கியுள்ள மாசுக்கள் நீங்குகின்றன. உணவுகள், செயல்கள் மூலமாகவும் இயல்பான வளர், சிதை மாற்றங்கள் மூலமாகவும் இந்த உடற்கட்டுக்களில் மலினங்கள் தங்குகின்றன. அவற்றில் முக்கியமானது முற்றுப் பெறாத அயன்கள் "Free radical" இவற்றை உடலில் இருந்து வேகமாக அகற்றும் ஆற்றல் எண்ணெய் குளியலுக்கு உண்டு உடலில் தேய்க்கும் எண்ணெயில் உள்ள விற்றமின்கள் இயற்கையான தாவர வேதியல் பொருட்கள், பிற நுன் ஊட்டச் சத்துக்கள் மிகவும் நுட்பமான முறையில் உடலில் உட் கிரகிக்கப்படுகிறது. கண், காது போன்ற துளைகளிலும் தோலிலும் ஊறக் கூடிய எண்ணெயிலுள்ள நுண்சத்துக்கள் உட் கிரகிக்கப்படுகிறது போன்றே உடலில் உட்புறமுள்ள கழிவுகளும் வெளியேறு கின்றது. இவ்வாறாக 7 உடற்கட்டுக்களும் தூய்மை அடைகின்றன. தோல் உடலுக்கு பாதுகாப்பு கவசமாக விளங்குகின்றது. சுற்று சூழலில் ஏற்படும் மாசு மாறி வரும் பருவகாலங்களுக்கு ஏற்ப தட்ப வெப்ப நிலையில் ஏற்படும் மாற்ற ங்கள் போன்றவையால் தோல் பாதிக்கப்டுகிறது. நமது தோலில் படியும் எல்லா விதமான அழுக்குகளும் நீரில் கரையும் தன்மை வாய்ந்தவை இல்லை. சிலவகை அழுக்குகள் கொழுப்பில் தான் கரையும். அப்படிப்பட்ட அழுக்குகள் எண்ணெய் தேய்க்கும் போது அகற்றப்பட்டு விடும். எண்ணெய் உடலில் தேய்க்கும் போது இரத்த ஓட்டம் தூண்டப்படும் தசைகள் நெகிழ்ந்து நன்றாக செயற்படும். இதனால் உடலுக்குள் 10-15% பிரான வாயு கூடுதலாக செல்வதாக ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. இது உடலில் புத்துணர்ச்சியை அதிகரிக்க செய்கிறது.



வாரம் ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வேண்டும். சூரியன் உதித்த 2 மணி நேரத்துக்குள் எண்ணெய் தேய்த்துக் கொண்டு இளம் வெயிலில் உடல் படுமாறு இருந்து கொண்டு 30-40 நிமிடம் இருந்தபின் குளித்தல் சிறந்தது. உணவு உண்டபின் குளித்தல் சிறந்ததன்று. அப்படி குளித்தால் அது இரத்த ஓட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தி அஜீரண த்தை உண்டாக்கும். எண்ணெயக் குளியல் குளித்த அன்று குளிர்பானங்கள் தவிர்த்தல் மற்றும் கடினமான வேலைகள் செய்வதை தவிர்த்தல் வெயிலில் செல்வதை தவிர்த்தல். ஆனால் வாரத்தில் 2 முறை எண்ணெய்க் குளியல் செய்தல் சிறந்தது.

# இன்று ஒரு தகவல் 102



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சிறுவர் உளவியல்

குழந்தைகள் விடயத்திலே மிகவும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். பெரியவர்கள் நிறைய பேருக்கு இது சரியாகத் தெரிவதில்லை. பெற்றோர்கள் சரியாக இல்லை என்றால் குழந்தைகளுக்கு பலவிதமான மனோதத்துவ நோய்கள் வந்துவிடுகிறது என்று நிபுணர்கள் எல்லோரும் சொல்லுகின்றார்கள்.

குழந்தைகளிடம் அன்பைக் காட்டுங்கள்... வேண்டாம் என்று சொல்லவே இல்லை! அது மென்மையாக இருக்கட்டும் முரட்டுத்தனமாக இருக்க வேண்டாம். என் கண்ணே என்று சொல்லிக் கொண்டு பல்லை நறநற என்று கடித்துக் கொண்டு தான் சில பேர் குழந்தைகளிடம் போவார்கள் அவ்வளவு அழுத்தமான அன்பு.

ஒரு 12 வயதுப் பெண் குழந்தை. அவளுக்கு அடிக்கடி மயக்கம் – வாந்தி. பல டொக்டர்களிடம் பரிசோதனை செய்தார்கள். மருந்துகள் எல்லாம் கொடுத்துப் பார்த்தார்கள். எந்தப் பிரயோஜனமும் இல்லை. போகப் போக அந்தப் பெண்ணுக்கு மனநிலை சரியில்லாமல் போய் கண்ணா பின்னா என்று ஒன்றுக்கொண்று சம்பந்தம் இல்லாமல் பேச ஆரம்பித்து விட்டது.

இதற்குக் காரணம் என்ன என்பதை ரொம்ப நாளைக்கு பிறகு தான் கண்டுபிடிக்க முடிந்தது. அந்தப் பிள்ளையோட அம்மா அப்பா அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்களாம் அதைப் பார்க்கின்ற போது எல்லாம் இந்தக் குழந்தைக்கு வாந்தி வந்து விடும். கன்னாபின்னா என்று பேச ஆரம்பித்து விடும். இரண்டு மூன்று நாளைக்கு இப்படி இருக்கும். பிறகு சரியாகப் போய்விடும்.

பெற்றோர்கள் சண்டை போட்டுக் கொள்ளும் போது பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாத உணர்வு பயம் இவையெல்லாம் மனசுக்குள்ளே அப்பா அம்மாக்குள்ள பாசம் குறையுது, அன்பு குறையுது, வெறுப்பு உண்டாகுது, மனநோய் உடல் நோய் இரண்டும் வந்திடுது.

இன்னொரு குழந்தை சின்னவயதிலே ஆரோக்கியமாகத் தான் இருந்தது. வாலிப வயதுக்கு வந்தவுடன் ஆஸ்துமா நோய் வந்து விட்டது.

குடும்பத்திலே யாருக்கும் அந்த நோய் கிடையாது. அந்த பெண்ணுக்கும் இதுவரைக்கும் எந்த தொல்லையும் வந்ததில்லை. இதற்கும் என்ன காரணம் என்கிறதை பின்னாடி தான் கண்டு பிடித்தார்கள்.

அவங்களுடைய அப்பா ரொம்ப கண்டிப்பானவர். குழந்தைகள் கட்டுப்பாடாக வளரனும் என்று நினைக்கிறவர். யாராவது அழுதால் அவருக்குப் பிடிக்காது குழந்தை எங்கேயாவது அடிபட்டு அழுதால் கூட மூடு வாயை சத்தம் போட்டால் அடி விழும் ஜாக்கிரதை அப்படி என்று கத்தி பயமுறுத்தி அழுகையை அடக்கி விடுவார். அதனால் அந்த பெண் சின்ன வயதிலேயே அழுகையை அடக்கப் பழகிப் போய் விட்டது. அப்புறம் என்ன ஆனது தெரியுமா? அழவேண்டிய விடயத்துக்குகூட அந்த பெண் அழ முடியாமல் மனதிற்குள்ளேயே வேதனை முட்டிய போதும் அழ முடியாது. கண்ணிலே கண்ணீர் வராது கடைசியில் அது ஆஸ்துமாவாக வந்து விட்டது.

ஒரு குழந்தை அழுதால் ஐயே இதற்குப் போய் அழுவார்களா அது சின்ன விடயம் என்று பக்குவமாக சொல்ல வேண்டும் அது தான் நல்லது. ஒரு ஆறு வயது பையன் அவனுக்கு மனது உடம்பு பாதிப்பு. ஆரோக்கியம் குறைந்து இரத்த சோகை ஏற்பட்டு போய் விட்டது. அவன் உடுப்பு எப்போதும் சுத்தமாக இருக்கும். வெளியே போய் விளையாட மாட்டான். காரணம் அவன் அம்மா தான்.

உடுப்பு அழுக்காகப் போனால் அம்மா திட்டுவார்களாம். குழந்தைகள் காற்றோட்டமான இடத்திலே விளையாட வேண்டும், கீழே விழ வேண்டும், காயம் பட வேண்டும், நண்பர்கள் கூட கருத்து வேறுபாடு வர வேண்டும், அழ வேண்டும், சரியாக போக வேண்டும், இதெல்லாம் இயற்கையான மனவளர்ச்சிக்கு உதவுகிறது. வாழ்க்கை என்ன என்பதை அவர்கள் அங்கே தான் நல்லா புரிந்து கொள்ள முடியும். பிரச்சினைகளை சந்திக்காமல் வளர்ந்து விட்டால் எப்படி?

சில பேர் பெருமையாக சொல்லுவார்கள். என் பிள்ளை பள்ளிக்கூடம் விட்டால் நேராக வீட்டுக்கு வந்து விடுவான். பாட புத்தகத்தை தூக்கி வைத்துக் கொள்ளுவான். மற்ற பிள்ளைகளோட எல்லாம் சேர மாட்டான் இது நல்லது இல்லை.

சில பிள்ளைகள் படுக்க போகும் போது விளையாட்டு பொம்மை அல்லது போர்வை இது மாதிரி எதையாவது துணைக்கு எடுத்துக் கொண்டு போவார்கள். இது ஒரு பாதுகாப்பு உணர்வை கொடுக்குது. அதனாலே குழந்தை அமைதியாக தூங்கும். ஒரு அப்பா மார்க் லிஸ்ட்டை கையிலே வைத்துக் கொண்டு மகனைத் திட்டினார்.

கணக்கிலே நூற்றுக்கு 20 மார்க்ஸ் வாங்கியிருக்கிறாய் உனக்கு வெட்கமாக இல்லையா என்றார். இல்லை என்றான் பையன் ஏன் என்று கேட்டார்.

இப்போது நீங்கள் கையிலே வைத்திருக்கிறது என்னுடைய மார்க் லிஸ்ட் இல்லை. அது உங்களோடது அம்மா தான் அதை பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். அதைத்தான் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தேன். அப்படி என்றான் பையன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் இடம்பெற்ற
## தொற்றாநோய் தொடர்பிலான விழிப்புணர்வு



(கரணவாய்)


தொற்றா நோய் பாதிப்புகளில் இருந்து பொதுமக்கள் தம்மை விடுவித்துக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று பருத்தித்துறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஒன்றிணைந்து இவ் விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டப்போட்டி நிகழ்வு இடம்பெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் திருமதி தயாளினி மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற் நிகழ்வில் சைக்கிள் ஓட்டுவதன் மூலம் உடலுக்கு அடிப்படையான பயிற்சியினை வழங்குவதன் ஊடாக குறித்த தொற்றா நோய் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் பொதுமக்களிடம் சைக்கிள் ஓட்டம் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக குறித்த விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது.

விழிப்புணர்வு பருத்தித்துறை ஆதார மருத்துவமனை முன்றலில் இருந்து காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி யாழ். பருத்தித்துறை வீதி ஊடாக பயணித்து நெல்லியடி சந்தியை சென்றடைந்து அங்கிருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியூடாக சென்று மாலை சந்தி வழியாக திரும்பவும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நிறைவடைந்தது.


இதில் வைத்தியர்கள் மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-60)



யாழ்.மரியன்னை தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் தலைமையில் நேற்று இடம்பெற்றன.

(படம்- சிவசாந்தன்)

# ஈழத்தமிழர்களின் அடையாள மனிதனை இழந்தோம்
## இரங்கல் செய்தியில் சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

யாழ்.மண்ணின் பெரிய விளானில் பிறந்து, உலக அரங்கில் ஈழத்தமிழர்களுக்கான அடையாளத்தை ஆழப்பதித்த பெருமனிதன் நாகலிங்கம் எதிர் வீரசிங்கம். ப்ன்னாட்டு அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்க் கல்வியாளராக, சர்வதேச விளையாட்டு வீரராக, சமூக செயற்பாட்டாளராக பல்துறை விற்பன்னராக விளங்கிய அவரின் மறைவு ஈழத்தமிழர்களின் அடையாள மனிதர்களுள் ஒருவரது மறைவாக அமைந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது . மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

விளையாட்டு வீரர் என்கிற அடையாளங்களைக் கடந்து, ஒரு கல்வியியலாளராகவும் தனித்துவம் பெற்று மிளிர்ந்தவர். இலங்கை, சியேரா லியோனி, பப்புவா நியூகினி மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் யுனெஸ்கோவிலும் ஐந்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளமை தமிழர்களின் கல்வித்தர நிலை உயர்வுக்கான பெரும்சான்று எனலாம்.

மிக உயர்ந்த எண்ணங்களைக் கொண்ட, எளிதில் அணுகத்தகு சாதாரண மனிதனாக விளங்கிய அவரின் இயல்பு நிறை பண்புநிலையை, யாழ். ஆனைக்கோட்டையில் அவரை நேரில் சந்தித்த பொழுதொன்றில் அறிந்து கொண்டேன்.

தமிழ் மக்களின் அடையாளங்களை மீள நிறுவுவதாயின் அது அடுத்த தலைமுறையின் கல்விப்பாரம்பரியத்தால் மட்டுமே சாத்தியம் என்பதை அறிந்து, அதற்கான காரியங்களை ஆற்ற முனைந்திருந்தார். பல்துறைசார் நிபுணத்துவ ஆலோசகராக ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களில் உள்ளார்ந்த தீவிரத்தோடு செயலாற்றிய இவர் வடக்குக்கான "கல்விச் செயலணி" ஒன்றின் தோற்றத்துக்காக அயராதுழைத்தவர். அத்தகைய பெருமனிதனின் இழப்பால் துயருறும் அதே வேளை அவரின் ஆத்மா அமைதி பெற பிரார்த்திக்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3096

மாதுரி




தனுப்பிரியா




வைஸ்ணவி




மாதவன்




வதனன்




லங்கேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 461





படகுக்காரன் குனிந்து கை கொடுத்தான். வந்தியத்தேவன் படகில் ஏறி உட்கார்ந்தான். படகு மேலே சென்றது.

படகில் இருந்தவர்களை வந்தியத்தேவன் ஆராய்ந்து பார்த்தான். ஒருவன் தமிழ் நாட்டானே அல்ல. அரபு நாட்டான் போலக் காணப்பட்டான். அவன் எப்படி இங்கு வந்தான் என்ற வியப்புடன் மற்ற இருவரையும் பார்த்தான். அவர்கள் முகத்தில் பாதியை மறைத்து முண்டாசு கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் தமிழ் நாட்டவர்கள் என்று தெரிந்தது.

அதுமட்டுமன்று, பார்த்த முகங்களாகவும் காணப்பட்டன. எங்கே, எங்கே பார்த்தோம் இவர்களை?- ஆ! நினைவு வருகிறது! பார்த்திபேந்திர பல்லவனுடைய தம்பளையிலிருந்து திரும்பி வந்தவர்கள் அல்லவா இவர்கள்? ஆழ்வார்க்கடியான் இவர்களைத் தானே இளவரசரைக் கொல்ல வந்தவர்கள் என்று சொன்னான்? ஓகோ! இவர்களில் ஒருவனை வேறொரு இடத்தில் கூடப் பார்த்திருக்கிறோமே? மந்திரவாதி ரவிதாஸன் அல்லவா இவன்? ஆந்தை கத்துவதுபோல் கத்திவிட்டுப் பழுவூர் ராணியைப் பார்க்க வந்தான் அல்லவா இவன்? சரி, சரி இளவரசர் கப்பலில் இருப்பது தெரிந்துதான் இவர்கள் அதில் ஏறிக்கொள்ளப் போகிறார்கள்! ஆகா! இளவரசர் போகும் வழியில் இது ஓர் அபாயமா? நாம் அவசரமாய் ஓடி வந்து இந்தப் படகைப் பிடித்து ஏறியது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று?

படகு போய்க்கொண்டிருந்தது. மரக்கலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. படகில் இருந்தவர்கள் மௌனம் சாதித்தார்கள். வந்தியத்தேவனால் மௌனத்தைப் பொறுக்க முடியவில்லை. பேச்சுக் கொடுத்துப் பார்க்க விரும்பினான்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"தெரியவில்லையா? அதோ நிற்கும் கப்பலுக்குப் போகிறோம்!" என்றான் மந்திரவாதி. பாதி மூடியிருந்த வாயினால் அவன் பேசிய குரல் பேயின் குரலைப் போலிருந்தது.

"கப்பல் எங்கே போகிறது?" என்று வந்தியத் தேவன் கேட்டான்.

"அது கப்பலுக்குப் போன பிறகு தெரியவேண்டும்" என்றான் ரவிதாஸன்.

மறுபடியும் படகில் மௌனம் குடிகொண்டது. வெளியில் கடலின் ஓங்கார நாதம் சூழ்ந்தது.

இப்போது மந்திரவாதி ரவிதாஸன் மௌனத்தைக் கலைத்தான். "நீ எங்கே அப்பா, போகிறாய்?" என்று கேட்டான்.

"நானும் கப்பலுக்குத்தான் போகிறேன்" என்றான் வந்தியத்தேவன்.

"கப்பலுக்குப்போய் பிறகு எங்கே போவாய்?"

"அது கப்பலில் ஏறிய பிறகுதான் தெரியவேண்டும்!" என்று பாடத்தைத் திருப்பிப் படித்தான் வந்தியத்தேவன்.

படகு கப்பல் அருகில் சென்றது. மேலேயிருந்து ஓர் ஏணி கீழே இறங்கியது. அதில் ஒவ்வொருவராக ஏறிச் சென்றார்கள். ஏணி மேலே போவதற்குள் வந்தியத்தேவன் அதில் தொத்திக் கொண்டான். கப்பலின் மேல் தளத்தில் ஏதோ பேச்சு நடந்தது. அவனுக்குப் புரியாத பாஷையாகத் தொனித்தது. வந்தியத்தேவன் இன்னும் துரிதமாக ஏணியின் மீது ஏறிக் கப்பலின் தளத்தில் குதித்தான். குதித்த உடனே, "எங்கே இளவரசர்?" என்று இரைந்து கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். சுற்றிலும் அவன் பார்த்த காட்சி அவனுடைய இரும்பு நெஞ்சத்தையும் சிறிது கலக்கிவிட்டது. அவனைச் சுற்றிலும் பயங்கர ரூபமுள்ள அரபு நாட்டு மனிதர்கள் நின்றார்கள். ஒவ்வொருவனும் ஒரு ராட்சதனைப் போல் தோன்றினான். எல்லாரும் அவனை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவனுடைய கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை.

"ஏதோ பெரிய தவறு செய்துவிட்டோம்" என்ற உணர்ச்சி வந்தியத்தேவன் உள்ளத்தில் உதித்தது. இது சோழ நாட்டுக் கப்பல் அல்ல. இருக்க முடியாது. இதில் உள்ளவர்கள் தமிழ் மாலுமிகள் அல்ல. பெரிய பெரிய குதிரைகளை விற்பதற்காகக் கொண்டு வரும் அரபு நாட்டு மனிதர்கள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மது செய்த முட்டாள்த்தனம்



மது அந்த கிராமத்தில் ஒரு எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். அவன் மனைவி அவனை எப்போதும் திட்டிக் கொண்டே இருப்பாள். ஏனெனில் மது ஒரு முட்டாள். எந்த செயலையும் அவனாக செய்ய மாட்டான். ஒருவர் சொல்வதை அப்படியே கேட்டு செய்து விடுவான். அது சரியா, தவறா என யோசித்து அவன் செயற்பட்டது இல்

மனைவி யிடம் அதிகமாக திட்டு வாங்குவான்.

ஒருநாள் அவனுடைய நாய் இருந்த ஒரு பழைய கூண்டில் முயல் குட்டி இருந்ததைப் பார்த்தான். அதை பெரிதாக அவன் பாதுகாக்கவில்லை என்றாலும் அதற்கு தேவையான உணவை தவறாமல் கொடுத்து வந்தான். அதற்கும் மனைவி அவனை திட்டத்தான் செய்தாள்.

ஒருநாள் மது அந்த முயலை தூக்கி கொண்டு நகரத்தில் வலம் வர, அங்கு ஒரு இடத்தில செல்ல பிராணிகளுக்கு போட்டிகள் நடைபெறுவதை பார்த்தான். முட்டாள் மதுவிற்கு தானாக ஒரு யோசனை வந்து தனது முயலை அதில் கலந்து கொள்ள வைத்தான்.

சும்மா ரோட்டில் போறவனுக்கு அடிச்சது யோகம் என்பது போல, அந்த போட்டியில் கலந்து கொண்ட முயலுக்கு பல விதங்களில் பரிசுகள் குவிந்தன. அவற்றை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றவனுக்கு இன்னும் அதிகமாக திட்டுதான் விழுந்தது. ஏனெனில் அதில் எதுவுமே மனைவிக்கு உபயோக படுமாறு இல்லை.

இது ஒருபக்கம் இருக்க முட்டாள் மதுவின் முயலை பற்றி ஊரெல்லாம் பேசத் தொடங்கினார்கள். ஒன்னும் செய்யாமல் பெரியளவில் ட்ரெண்ட் ஆனான் மது. அவனது முயலை பார்த்தவர்கள், இதுவா பரிசுகளை வென்றது, இப்படி அழுக்காக இருக்கிறதே என பார்த்து விட்டு சென்றார்கள்.

மதுவுக்கு அதிர்ஷ்டம் விடாமல் அடித்தது எங்கு சென்றாலும் பரிசுகளை குவிக்க ஆரம்பித்தது அந்த முயல். ஆனால் எதுவும் பணமாக இல்லை. சான்றிதழ்கள், மெடல்கள் மட்டுமே கிடைத்தன. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம் வாழ்க்கைத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகள். ~யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனம் நெகிழ்ந்த நாள்

சிவபூமி அறக்கட்டளை, யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியன கூட்டாக இணைந்து நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் கருவள சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்து வைத்துள்ளன.

சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் தலைமையில் நடந்த இந்நிகழ்வில், யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் மருத்துவபீடம் ஆகியவற்றின் வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட யாழ்ப்பாண மண்ணின் பெறுமதிமிக்க பெரியவர்கள் கலந்து கொண்டனர்.

பெண்கள் சுகநல நிலையம் என்ற பெயரில் இயங்கக்கூடிய இக்கருவள சிகிச்சை நிலையமானது பிள்ளைச் செல்வம் இல்லாதவர்களின் பெருங் குறையைப் போக்கி, அவர்கள் பிள்ளைப் பேற்றைப் பெற்று மனநிறைவுடன் வாழ்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு என்பது இங்கு குறித்துரைக்கப்பட வேண்டியது.

எனினும் கருவள சிகிச்சை நிலையம் பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிப்பது நம் நோக்கமல்ல.

மாறாக, ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் யாழ்ப்பாண மண்ணில் நாம் அனுபவித்த ஆனந்தத்தை, மனநிறைவை இவ்விடத்தில் பதிவு செய்தே ஆக வேண்டும். ஆம், பத்திரிகையாளர்கள் என்றால், அவர்கள் குறைகளை மட்டுமே துலாம்பரப்படுத்து வார்கள். நிறைவைக்கண்டும்காணாமல்கைவிடுவார்கள் என்ற குற்றச்சாட்டு பொது மக்கள் மத்தியில் உண்டு.

ஆனால் நேற்றைய தினம் (21) யாழ்ப்பாணத்தில் கருவள சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டு அங்கு ஆற்றப்பட்ட உரைகளும் அதில் பங்குபற்றியவர்களையும் பார்த்தபோது உண்மையிலேயே மனநிறைவும் நெகிழ்வும் ஏற்பட்டது.உண்மை. கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் தலைமையுரை அங்கு கூடியிருந்த அனைவரையும் நெகிழ வைத்தது.

கருவள சிகிச்சை நிலையத்துக்கான மிகப் பெறுமதி வாய்ந்த இல்லத்தை அற்வக்கேற் எஸ்.ஆர்.கனகநாயகம் அவர்களின் மகள் தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கின்ற வைத்திய நிபுணர் பாலசுப்பிரமணியம் சாவித்திரி தம்பதிகள் சிவபூமிக்கு அன்பளிப்பாக வழங்க, அதனை எஸ்.ஆர்.கனகநாயகம் அவர்களின் மகனும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கனகீஸ்வரன் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக கையளித்த அந்த நிகழ்வும் அபயம் அமைப்பின் கொடையும் எங்கள் யாழ்ப்பாண மண்ணின் ஈகையை நினைத்து பெருமையுற வைத்தது.

அதேபோன்று தொண்டுநாத சுவாமிகள், துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா, மருத்துவ நிபுணர்கள் சரவணபவன், பாலகோபி, ரகுராமன் மருத்துவ பீடாதிபதி சுரேந்திரகுமார், பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் ஆற்றிய உரைகள் எங்கள் மண்ணின் ஆற்றலை – அறிவை – சேவை செய்கின்ற பரந்த மனப்பாங்கை – நேர்மையை – இந்த மண் மீது நம் அறிவுடைப் பெருமக்கள் கொண்டுள்ள பற்றை, பாசத்தை துலாம்பரமாக்கியபோது உண்மையிலேயே எம் நெஞ்சம் நெகிழ்ந்து கொண்டது.

மருத்துவ நிபுணர் பாலகோபி அவர்கள்; நாங்கள் ஒற்றுமைப்பட்டால் – நாங்கள் பெறுமதியானவர்கள் என்பதை நிரூபித்தால் எங்களை நோக்கி மற்றவர்கள் வருவார்கள் என ஆற்றிய உன்னதமான உரையும் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் எங்களின் முன்மாதிரி என்று வைத்திய நிபுணர் ரகுராமன் கூறியதன் பெருமையும் கண்டு உண்மையிலேயே எம் இதயம் நெகிழ்ந்தன. கன்னத்தின் ஓரங்கள் நனைந்தன.கருவள சிகிச்சை நிலையத்தின் முகிழ்ப் பில் நடந்த, அந்த உன்னதமும் உயர்ந்த சிந்தனையும் நிச்சயம் அங்கு கருவாகி உருவாகும் குழந்தைகளிலும் பரிணமிக்கும் என்பது சத்தியம்.

## கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாக அலெக்ஸ்ராஜா

(கண்டாவளை)

கிளிநொச்சி மேல் நீதி மன்றத்தின் முதலாவது மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய மேல் நீதிமன்ற நீதிபதி எ.எம்.எம் சஹாப்தீன் நாளை மறுதினம் முதல் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்று செல்வதால் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாக எ.ஜி.அலெக்ஸ்ராஜா பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டுள்ளார். (நி-6-315)

## மே மாத முற்பகுதியில் இலங்கை வருகிறார் ஜப்பான் அமைச்சர்?

(கொழும்பு)

ஜப்பான் வெளி விவகார அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா எதிர்வரும் மே மாத முற்பகுதியில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தர விருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா ஏற்கனவே கடந்த ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

ஜப்பானிய வெளி விவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் இலங்கைக்கான அவரது முதலாவது விஜயமாக அது அமைந்திருந்தது.

இவ் வருகைக்கான திகதி மற்றும் நோக்கம் என்பன பற்றிய தகவல்கள் இன்னமும் வெளிவராத போதிலும், இதன் போது விசேடமாக இலங்கையின் பொருளாதார மீட்சி, கடன்மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-6)

## பேசாலைக்கு அமைச்சர் விஜயம்

(மன்னார்)

மன்னார் பேசாலை பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐஸ் தொழிற்சாலை மீனவ கூட்டுறவு சங்க அலுவலகம்மற்றும்கடற்கரையை பார்வையிட்டுள்ளார்.

மன்னார் பேசாலை கிராமத்தில் பழமை வாய்ந்த நிலையில் காணப்படுகிறது. ஐஸ்தொழிற்சாலை வளாகத்தில் முறைகேடான செயல்கள் இடம்பெற்று வருவது தொடர்பில் மக்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் தமது தேவைகளை வலியுறுத்தி பேசாலை கிராம பொது அமைப்புகள், பொது மக்கள் ஒன்று சேர்ந்து நான்கு கோரிக்கைகளை அமைச்சரிடம் முன்வைத்தனர். குறித்த கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

## சு.க அலுவலகத்திற்கு முன் கடும் பதற்ற நிலை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்திற்கு முன்பாக கடும் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நேற்று நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் கட்சியின் அலுவலகத்திற்குள் செல்ல முற்பட்ட நிலையில் பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்தே இந்த பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் முக்கிய ஆவணங்கள் காணாமல் போயுள்ளதாக மருதானை பொலிஸ் நிலையத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அங்கு பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளநிலை மருத்துவம் மற்றும் அறுவையியல் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தால் இளநிலை மருத்துவம் மற்றும் அறுவையியல் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாணவர் தெரிவுக்கான நிபந்தனைகளாக,17 தொடக்கம் 24 வயதுக்கு இடைப்பட்டிருத்தல், 2022 க.பொ.த. உயர்தர பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டு C சித்திகளும் ஒரு S சித்தியும் பெற்று பல்கலைக்கழக நுழைவுத் தகுதியினை பெற்றிருத்தல் அல்லது 2023 கேம்பிரிஜ்/ எடெக்ஸ் உயர்தர பரீட்சையின் உயிரியல் பிரிவில் உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களில் குறைந்த பட்சம் இரண்டு C சித்திகளும் ஒரு D சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் முதல் மூன்று அமர்வுகளும் ஒரே தடவையில் பெற்றிருத்தல்.

க.பொ.த உயர்தர பொதுச் சாதாரண பரீட்சையில் குறைந்த பட்சம் 30 புள்ளிகளை பெற்றிருத்தல், க.பொ.த சாதாரண தரம் அல்லது அதற்கு இணையான கேம்பிரிஜ்/ எ. டெக்ஸல் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியை பெற்று இருத்தல் மற்றும் திருமணமாகாதவராய் இருத்தல் வேண்டும்.

குறித்த கற்கை நெறியின் காலம் 5 வருடங்கள். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 5.05.2024 ஆகும். மேலதிக தகவலுக்கு WWW. kdu.ac.lk எனும் இணையத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும். (நி-6)

## முச்சக்கரவண்டி-கொள்கலன் நேருக்கு நேர்மோதல்

### ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

எல்பிட்டிய - அவித்தாவ பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கர வண்டியொன்றும் கொள்கலன் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், முச்சக்கர வண்டியொன்றும் கொள்கலன் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் 68 வயதான முச்சக்கரவண்டி சாரதியும் அவரது 10 வயது பேரனும் ஏழு வயது பேத்தியும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், உயிரிழந்தவரின் மனைவி, மகள் மற்றும் 18 வயது பேரன் ஆகியோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

## இலங்கை வரும் சீன துணை அமைச்சர்

(கொழும்பு)

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச பிரிவின் துணை அமைச்சர் சன் ஹையன் இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார்.

இந்த விஜயமானது நாளை 23ஆம் திகதி இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுவதுடன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் மட்டத்தினரை சந்தித்து சீன துணை அமைச்சர் சன் ஹையன் கலந்துரையாட உள்ளார். (நி-6)



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

15

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆங்கிலேயர் சார்பில்
- ரொபர்ட் பிரவுன்றிக் - ஆள்பதி
- ஜோன் டொய்லி - பிரதான மொழிபெயர்ப்பாளர்
- ஜேம்ஸ் சதர்லன்ட் - ஆங்கிலேய அரசின் பிரதி செயலாளர்

**கண்டி மக்கள் சார்பாக கையெழுத்திட்டவர்கள்**

- எஹெலபொல மகா நிலமே
- மில்லேவ - வெல்லஸ்ஸ தொகுதி
- ரத்வத்த - மாத்தளை தொகுதி
- கலகொட - கண்டி கலாவிய
- மொல்லிகொட அதிகாரம் - ஏழு கோறளை
- மொல்லிகொட - மூன்று கோறளை
- பிலிமதலாவ அதிகாரம் - சப்பிரகமுவ தொகுதி
- பிலிமதலாவ - நான்கு கோறளை
- கெப்பெட்டிபொல - ஊவா
- கலகம - தமன்கடுவ

கையெழுத்தில் சில மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக இப்போதைய புதிய ஆய்வுகள் சந்தேகிக்கின்றன. குறிப்பாக எஹெலபொலவின் கையெழுத்து போலியாக இருக்க வாய்ப்புண்டு என்றும் அதற்கு ஏதுவாக இருக்கக்கூடிய காரணங்களையும் அந்த ஆய்வுகள் முன்வைக்கின்றன. பரைது கையெழுத்துக்கள் அப்படி மோசடியானவை என்கிறது அந்த ஆய்வுகள்.

**ஒப்பந்த உள்ளடக்கம்**

உடன்படிக்கை 12 பிரமாணங்களைக் கொண்டது. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் அரச போகத்தை இழப்பதுடன், இனி அந்த வம்சாவளியை சேர்ந்த எவருக்கும் ஆளுரிமை இல்லை என்றும், அவர்களில் எவரும் கண்டி பிரதேசத்துக்கும் நுழைந்தால் மரண தண்டனை நிறைவேற்றுவது குறித்தே முதல் மூன்று பிரமாணங்களும் பேசுகின்றன.

நான்காவது கண்டி பிரித்தானிய ஆட்சிக்குட்படுத்தப் பட்டதாக அறிவிக்கிறது. ஐந்தாவது பௌத்த மதத்தை பேணிப்பாது காப்பது குறித்தும் ஆறு, ஏழு, எட்டு ஆகியவை தண்டனை நிறைவேற்றுவதில் நெகிழ்ச்சித்தன்மை குறித்தும், ஒன்பதாவது கண்டியில் நீதி வழங்கும் அதிகாரம் ஆள்பதியின் கட்டுப்பாட்டில் இருப்பது, பத்தாவது இந்த ஒப்பந்தத்தின் வலிமை குறித்தும், பதினோராவது கண்டியில் பெறப்படும் வரி கண்டியின் அபிவிருத்திக்கு பயன்படும் என்றும், பன்னிரெண்டாவது வர்த்தகம் குறித்த விடயங்களை ஆள்பதி மன்னருக்கு பொறுப்பு கூறுவது குறித்தும் கூறப்பட்டுள்ளது.

**கண்டியின் நிர்வாகம் (1815-1818)**

கண்டி இராச்சியத்தின் புது நிர்வாக ஒழுங்குகள், ஆங்கிலேயர் 1815 இல் கண்டிப் பிரதானிகளுடன் செய்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே ஏற்படுத்தப்பட்டன. அவ்வுடன்படிக்கையில் "பிரித்தானிய அரசாங்கத்தால் சட்ட முறைப்படி நியமிக்கப்பட்ட அதிகாரிமார், திசாவைமார்,மொகத்தாலைமார், கோறளைமார், விதானமார் மற்றும் பிரதம தலைமைக்காரர் ஆகியோருக்கு, அவர்தம் பதத்திற்குரிய சட்ட முறையிலமைந்த உரிமைகள், பேறுகள், அதிகாரங்கள் யாவும் உறுதியாக்கப்படும்" என ஆங்கிலேயர் பிரதானிகளுக்குக் கொடுத்த உத்தரவாதத்துக் கிணங்க, பிறவுண்றிக் கண்டியின் குடியியற் பாலனத்தைப் பழைய சட்டதிட்டங்களினதும் பழக்க வழக்கங்களினதும் அடிப்படையிலேயே நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

பிரதானிகள், தத்தம் பழைய மாகாணங்களின் பரிபாலனத்துக்குப் பொறுப்பாளிகளாக்கப்பட்டனர். மொல்லிகொடை தொடர்ந்து முதல் அதிகாரி ஆகவும் ஏழு கோறளைகளின் திசாவையாகவும் பொறுப்பேற்றார்.

கப்புவத்தை இரண்டாம் அதிகாரி ஆக நியமனம் பெற்றார். கெப்பிற்றிப்பொலா ஊவாவுக்கும், பிலிமையின் மகன் நான்கு கோறளைகளுக்கும் திசாவைகளாக நியமனம் பெற்றனர். எனினும் பழமையின் மத்தியில், ஆங்கிலேயர் தமது புதுமையான ஒழுங்குகளை ஏற்படுத்த முயன்றனர். விசேடமாக நீதி பரிபாலன விடயங்களில் எல்லா மக்களுக்கும் பட்சபாதகமற்ற நீதியை வழங்கவும், அவர்களைப் பிரதானிகளின் கொடூரங்களிலிருந்து காக்கவும் திடம் பூண்டனர்.

பிறவுண்றிக், கண்டி இராச்சியத்தின் பரிபாலனம், கரையோர மாநிலங்களின் பரிபாலனத்தினின்று வேறாக அமைக்கப்பட வேண்டுமெனக்கருதினர். இதற்கிணங்க அவர் 1815 இல், கண்டியின் பிரித்தானியத்தானிகராக யோண் டி ஒயிலி என்பவரை நியமித்தார். அவருக்குதவியாக கண்டியிலும் பதுளையிலும் இரு முகவர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் மூன்றாம் முகவரொருவர் ருவான்வலையில் நியமிக்கப்பட்டார்.

கண்டியின் அதிகார்கள், திசாவைகள் யாவரும் டி ஒயிலியினதும் அவரது உதவியாளர்களினதும் பார்வையின் கீழ்த்தான் மாகாணப் பரிபாலனத்தை நடத்தினர். 1816 இல், கண்டியின் நிருவாகத்துக்குப் பொறுப்பாக மூன்று ஆணையாளரைக் கொண்ட ஓர் ஆணையாளர் குழுவினை ஆள்பதி நியமித்தார்.

டி ஒயிலி, ஆணைக்குழுவின் தலைவராகவும், உதவித் ஸ்தானிகர், கண்டி அரசாங்க முகவர் என்பவர்கள் குழுவின் மற்றைய உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டனர். மேலும் பரிபாலனத்தை வலுப்படுத்த கண்டியில் நீதிபதி ஒருவரும் இரத்தினபுரியில் நான்காவது முகவரும் நியமிக்கப்பட்டனர்.

இவ்விதமாக 1815 ஆம் ஆண்டு உடன்படிக்கையும் அதைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட புதுப் பரிபாலன ஒழுங்குகளும் கண்டி மக்களையும் பிரதானிகளையும் திருப்திப்படுத்தும் நோக்குடன் மிகத் தாராள சிந்தையுடன் செய்யப்பட்டன. கண்டியில் ஏற்பட்ட புதுப் பரிபாலன முறை பிரதானிகளின் அதிகாரங்களைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொடுத்தது.

பிரதானிகள் சிங்கள அரசனுக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகத்தின் வழியாகவே ஆங்கிலேயர் கண்டியின் அரசதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்த தென்பதை நன்குணர்ந்த ஆங்கிலேயர், இது காலவரை பிரதானிகள் அனுபவித்து வந்த உரிமைகளையும் அதிகாரங்களையும் அனுமதித்து, அவர்களைச் சமாதானப்படுத்த வெகுவாக முயற்சித்தனர். ஆனால் பிரித்தானியர் எத்துணைச் சலுகைகளைக் காட்டிய போதும் இருபகுதியாருக்குமிடையே முரண்பாடுகள் எழவே செய்தன.

ஒழுங்கும் கட்டுப்பாடுமுள்ள பிரித்தானியரின் ஆட்சிக்கும் மானிய முறையின் அடிப்படையில் இயங்கிய கண்டியரின் ஆட்சிமுறைக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமிடையிலுள்ள வேறுபாடுகள் காணப்பட்டன. ஆளுவோர் ஆளப்பட்டவரிலிருந்து சாதி, மதம், மொழி, பழக்கவழக்கங்கள் ஆகிய சகல துறைகளிலும் வேறுபட்டு நின்றனர்.

இரு பகுதியினரையும் ஒன்றுபடுத்தவல்ல அனுதாபமோ அன்றேல் கவர்ச்சியோ அவர்களுக்கிடையே இருக்கவில்லை. அவர்களைப் பிரித்து வைப்பதற்குக் காரணிகள் நிறைய இருந்தன.

இந் நிலையில் சிங்கள வல்லாட்சிக்கு அடிபணிந்து நடந்த பிரதானிகளும் மக்களும் அந்நியரின் புது அரசாங்கத்துக்குப் பணிந்து நடப்பர் என எதிர்பார்ப்பது அசாத்தியமானது.

தாம் வெறுத்த மன்னன் ஒருவனைச் சிம்மாசனத்தினின்று இறக் குவதற்காக மாத்திரம் ஆங்கிலேயரை வரவழைத்த கண்டியர், அவர்கள் தொடர்ந்து தமது நாட்டில் நிலை த்து நிற்பரென்று எதிர்பார்க்கவில்லை. அவர்கள் ஆங்கிலேயருக்குக் கூறியதாவது "நீங்கள் அரசனைச் சிம்மாசனத்தினின்று நீக்கிவிட்டீர்கள். மேலும் தேவைப்படுவது ஒன்றுமில்லை. நீங்கள் எங்களை விட்டு விடை பெறலாம்". இக்கூற்று கண்டியரின் உள்ளக்கிடக்கையை மிகத்திறம்பட எடுத்துக் கூறும். ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஒரு வல்லாட்சி இன்னுமொன்றுக்கு இடங்கொடுத்ததையே நடைமுறையில் கண்டனர்.

சிங்கள மன்னர் காலத்தில் பிரதானிகள், அரசன் ஒருவனுக்கு மாத்திரமே அடங்கி நடந்தனர். ஆனால் இப்பொழுது அவர்கள் அரசாங்க உத்தியோகத்தன் ஒவ்வொருவனுக்கும் படைஅதிகாரிக்களுக்கும் கீழ்ப்பட்டு நடக்க வேண்டியதைக் கண்டு மனம் புழுங்கினர். பல பழைய பழக்கங்களும் மரபுகளும் ஆங்கிலேயரினல் புறக்கணிக்கப்பட்டன. சாதிப்பாகுபாடு முறையில் ஊறிய பிரதானிகளுக்கு ஆங்கிலேயரின் நடுநிலை நீதிமுறை பிடிக்கவில்லை.

கடவைகளை அகற்றிக் கட்டுப்பாடுகளின்றி வியாபாரம் செய்வதற்குப் பிரித்தானியர் ஏற்படுத்திய புதுச் சட்டங்களினால் பிரதானிகளுக்குக் கிடைத்து வந்த கடவைப் பணம் இல்லாமற் போயிற்று. மேலும் பௌத்த சங்கமும் புது ஒழுங்குகளில் அதிருப்தியடைந்தது.

கண்டி மாநிலத்தில் ஒரு கிறிஸ்தவ அரசாங்கம் உயர்வடைந்தமை பௌத்த சமயத்துக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்குமென அஞ்சினர். முன்னர் கண்டி மன்னர்கள் பௌத்த சமய வழிபாடு, ஊர்வலங்கள், ஆசாரங்கள் என்பவற்றில் பங்குபற்றியதைப் போன்று புது ஆட்சியாளர்கள் செய்ய முடியாமற் போனமை அவர்களுக்குப் பெரும் இழுப்பாயிற்று.

பௌத்த மன்னர்களின் கீழ் பிக்குகள் அனுபவித்த அரசியல் செல்வாக்கும் மறைந்தது. இக்காரணங்களினால் சங்கம், ஆங்கிலேயர் ஆட்சியை மனமார வெறுத்தது. பிரதானிகளையும், பௌத்த சங்கத்தையும் போன்று குடியானவர்களும் புதுப் பரிபாலன முறையில் திருப்தியடையவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்ப்...

பெற்ற மோட்டார் கார்ப் பந்தயப் போட்டியில் ஏற்பட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்ததோடு மேலும் 21 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் ஹப்புத்தளை மற்றும் தியத்தலாவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் சிறுமி ஒருவரும் 4 பந்தய உதவியாளர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பந்தயத்தின்போது கார் ஒன்று ஓடு பாதையை விட்டு விலகி பார்வையாளர்கள் பகுதிக்குள் பாய்ந்ததிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தினையடுத்து நடைபெற விருந்த எஞ்சிய அனைத்து பந்தய போட்டிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தியத்தலாவை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7,10)

## ரணில் - பசில்...

முன்னணியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் நாளை மீண்டும் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் இந்தப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

எதிர்வரும் தேர்தல்கள் உள்ளிட்ட சில முக்கியமான விடயங்கள் தொடர்பில் இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கெனவே இவ்வாறான மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## விமானப்...

நிலவி வரும் மோதல் நிலை காரணமாகப் பாதுகாப்புக்கருதி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐரோப்பாவுக்கான விமான சேவை நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் விமானத்திற்குக் கூடுதல் எரிபொருள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விமானம் சுமந்து செல்லும் எடையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை லண்டன் செல்லும் விமானங்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகப் புறப்படும் எனவும் இதனால் லண்டன் செல்லும் பயணிகள் முன்கூட்டியே விமான நிலையத்தை வந்தடையுமாறும் ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் கேட்டுள்ளது.

மேலும் நேர மாற்றத்தினால் அசௌகரியங்களுக்கு உள்ளாகும் பயணிகளுக்கு மாற்று விமானங்கள் மற்றும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## ரணில் எந்தப்...

மக்கள் வாக்களிப்பார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவரால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா அண்மையில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

அவரின் கருத்துக்குப் பதில் வழங்கும்போதே வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

சஜித் பிரேமதாஸவையோ அல்லது அநுரகுமார திஸாநாயக்கவையோ நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாரில்லை. எனவே, அவர்கள் இருவரையும் தமிழ் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்கவே சஜித் பிரேமதாஸவுக்குத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கினார்கள்.

எனினும், அவரால் வெற்றிபெற முடியவில்லை. ஆனால், இம்முறை ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிடுகின்றார். வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீட்டெடுத்த தலைவர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் வாக்களிப்பார்கள்" என்று வஜிர எம்.பி. மேலும் தெரிவித்தார். (ந-7,10)

## ரணிலே...

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக மக்கள் ஏற்கெனவே தெரிவு செய்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தெரிவித்தார்.

களனியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், தேர்தலை இலக்கு வைத்து அரிசி விநியோகம் செய்யவில்லை, பல்வேறு அரசியல் சித்தாந்தங்களை கொண்டவர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைகின்றனர்.

"நாங்கள் தேர்தலை இலக்கு வைத்து இதைச் செய்யவில்லை. பல்வேறு அரசியல் சித்தாந்தங்களை கொண்டவர்கள் இங்கு உள்ளனர். பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டாலும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க அவரால் தான் முடியும் என்பதால் மக்கள் ஏற்கெனவே ரணில் விக்கிரமசிங்கவை தேர்ந்தெடுத்து விட்டனர்" என்றார். (ந-7,10)

## சுதந்...

வெளியிட்டுள்ளார்.

அது தொடர்பில் தற்போது கட்சிக்குள் உத்தியோக பூர்வமற்ற உரையாடல்கள் ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இரு துண்டுகளாகப் பிளவு பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்வரும் தேர்தல்களில் அரசியல் பலத்தை தக்கவைத்துக் கொள்வது தொடர்பிலான கேள்விக்கு சிறந்த தீர்வாக இவ்விடயம் கலந்துரையாடப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியிலிருந்து இருவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கும் சூழல் உருவாகியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றன.

கட்சியில் பெரும்பாலானோரின் முயற்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டணி ஒன்றை அமைப்பது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஷ ராஜபக்ஷவை நியமிக்க தயாராகி வருவதாகவும்,

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தரப்பிலிருந்து வேறொரு வேட்பாளரை நியமிக்க தயாராகி வருவதாகவும் கருத்துக்கள் நிலவி வருகின்றன. (ந-7,10)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2024.04.21 — சீட்டிழுப்பு இலக்கம் 5452 — V 4 6 9 0 4 7 7
அத சம்பத — V 9 0 4 7 — சீட்டிழுப்பு இலக்கம் 027 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.04.21 — சீட்டிழுப்பு இலக்கம் - 1482 — G 20 25 33 78 G — Double Chance 76741

மெகா பவர் — திகதி 21/04/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1800 — T 13 11 42 52 60 — 47716

லக்கி 7 VIP — திகதி 2024.04.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0278 — Z 4 6 5 8 9 2 Z

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3694 — சீட்டிழுப்பு திகதி 21.04.2024 — F 39 41 58 79 — F 58706 — தேசிய லொத்தர் சபை

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.04.21 — சீட்டிழுப்பு இலக்கம் 0761 — மீனம் 07 17 53 54 மீனம் — 48054 — 26

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பென் சம்பத — 21.04.2024 — வெற்றி வாரம் 160 — Y 0 0 7 3 9 0 — 53982 — L — அடுத்த சுப்பர் ஜக்பொட 20,858,900.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2426 — 21.04.2024 ஞாயிறு — 28 31 49 62 Z — 69345 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,326,136.00 — DLB

சனிதா — திகதி 2024.04.21 — வெற்றி வாரம் 4587 — 26 44 59 71 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,488,949.20 — 07240 — DLB

சசிரி — வெற்றி வாரம் 467 — 2024.04.21 — கபிலம் — வெற்றி இலக்கங்கள் 14 20 41 — 05 — 58404 — ரூ.2,391,800/- — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4138 — சீட்டிழுப்பு திகதி 2024.04.21 — ஞாயிற்றுக்கிழமை — 03 36 55 62 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,611,639.20 — 515003 — DLB

கப்ருக — 1602 — மஞ்சள் — 21.04.2024 ஞாயிறு — H 15 12 18 62 69 — 489677 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 518,520,558.60 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2252 — சீட்டிழுப்பு திகதி 2024.04.21 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.107,421,680.80 — 12 30 33 36 P — 148906 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்தின் வெலிங்டனில் இலங்கை உயர்ஸ்தானிகராலயம்

## வெளிவிவகார அமைச்சு

அமைச்சரவையின் தீர்மானத்தின் படி, நியூஸிலாந்தின் வெலிங்டனில் இல்ங்கையின் உயர்ஸ்தானிகராலயம் ஒன்றை திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆராய்வதற்காக, வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் பிரதீபா சேரம் தலைமையிலான குழுவொன்று இன்று நியூஸிலாந்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

நியூஸிலாந்தில் வதியும் இலங்கையின் தொழில் வல்லுநர்கள் மற்றும் மாணவர்களிற்கான வசதிகளை வழங்குவதும் வர்த்தகம், கல்வி, விளையாட்டு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதும் இதன் முதன்மை நோக்கங்களாகும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(ந-7,10)

## அதிகாரம்...

நியாயம் கிடைத்து விடாது. அவ்வாறெனில் இறுதி யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இழப்பீட்டுத் தொகையொன்றை அறிவித்து, விடுதலை செய்திருக்க முடியுமல்லவா என்று பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கான முழுமையான அதிகாரம் வழங்கப்படடால், பாதிக்கப்பட்ட மக்களுக் கான நீதியை நிலைநாட்டுவேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொண்டவர்களைப் போன்றே, அன்று ஆட்சியிலிருந்தவர்களும் பொறுப்பு கூற வேண்டும். சஹ்ரான் மாத்திரமின்றி அவருடன் தொடர்பினைப் பேணியவர்களும் உள்ளனர். இவ்வாறானவர்கள் அன்று நான் நாட்டில் இருக்கவில்லை என்றும் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

திட்டமிட்ட பின்னர் எவரும் சம்பவ இடத்தில் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. யுத்த காலத்தில் கூட இவ்வாறான புலனாய்வு தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் இவ்வாறான தகவல்கள் கிடைத்தும், பொறுப்பு கூற வேண்டியவர்கள் உறங்கிக் கொண்டிருந்திருக்கின்றனர்.

தாக்குதல்கள் இடம்பெற்ற இடங்களுக்குக் கூட சிலர் வருகை தரவில்லை. நாட்டின் தலைவர் பாதுகாப்பு அமைச்சர் அந்த சந்தர்ப்பத்தில் ஒழிந்து கொண்டிருந்தார்.

இவ்வாறான நபர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இழப்பீடு செலுத்துவதால் மாத்திரம் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு நியாயம் கிடைத்து விடாது.

எனவே இதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்பட்டால், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவேன் என குறிப்பிட்டுள்ளார்.

(ந-7,10)

## பிரதான...

ஆராதனையினைத் தொடர்ந்து இலங்கையின் உயரிய மன்றாகிய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தும் தமக்கு இதுவரை நியாயம் கிட்டவில்லை என தாக்குதலில் பலியானவர்களின் உறவுகள் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினர்.

விசேட ஆராதனைகளின் பின் கருத்து வெளியிட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளைக் காப்பாற்றவே பலரும் முனைகின்றனர். உண்மையானதும் சுதந்திரமானதுமான விசாரணையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். நீதியை எவராலும் மறைத்து வைக்க முடியாது என்றார்.

இதேவேளை கொழும்பில் இடம்பெற்ற ஐந்தாம் ஆண்டு நினைவுகூரல் நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கியநாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரே பிரான்சே 2019 உயிர்த்த ஞாயிறு படு கொலைகளிற்கு யார் காரணம் என்பதை கண்டுபிடிப்பதற்கு முழுமையான வெளிப்படையான விசாரணைகள் அவசியம் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

தாக்குதலைத் தடுக்க தவறினார்கள் என முன்னாள் ஜனாதிபதி மற்றும் உயர் அதிகாரிகளிற்கு எதிராக இலங்கையின் உயர்நீதிமன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ள போதிலும் பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காக இன்னமும் காத்திருக்கின்றனர் என தெரிவித்துள்ள மார்க் அன்ரே பிரான்சே, சவால்களிற்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளின் ஒருபகுதியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி வழங்கப்படுதல் வேண்டும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொறுப்புக்கூறல் அவசியம் என்றார்.

(ந-7,10)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
(C-0187) 076 825 7716 (ஆகாஸ்)

## கருவள...

விழாவானது நேற்று காலை இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி S.R.K. கனக்ஈஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதோடு கருவள சிகிச்சை நிலையத்தையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ரிஷி தொண்டுநாத சுவாமி, யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தி, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் போராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா, யாழ். பல்கலையின் மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் இ. சுரேந்திரகுமார் உள்ளிட்ட பலரும் காலந்து கொண்டனர்.

காலத்தின் தேவை கருதி சிவபூமி அறக்கட்டளையினால் நிறுவப்பட்டுள்ள குறித்த கருவள சிகிச்சை நிலையமானது இல. 61, 1 ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-7,10)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
(C-0185)
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0185)

வங்கி மீதி வசதிகள்
மற்றும்
விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா
ஆலோசனை மற்றும் வங்கி மீதி
(Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (530)
074 17 37 684

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 - 06 - 1993 |  | 21 - 04 - 2024 |

## ஜெயக்கொடி கௌதமன்

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்கொடி வசந்தராணி தம்பதிகளின் அன்புப் புதல்வன் கௌதமன் அவர்கள் நேற்று 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு பாக்கியம், வேலுப்பிள்ளை மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் பேரனும் ஜெயவாணி, சுலேக்கா காலஞ்சென்றவர்களான ஜெனார்த்தனன், சஞ்சீவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நதீசன், ஜெகன் ஆகியோரின் மைத்துனரும் ஜனுஷன், ஐஸ்மி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 22.04.2024 காலை திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் தொந்தனை தத்துப்பெட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கோட்டைக்காடு,
மல்லாகம். (527)

தகவல்:
குடும்பத்தினர்

2023 O/L
மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு
வரலாறு
ஆசிரியர் RS. சந்திரன்
காலம் ஏப்ரல் 27, 28 சனி, ஞாயிற்றுக்கிழமை
(காலை 8.00 மணி முதல் 1.00 வரை)
குறிப்புகள் :
☞ ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
☞ எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
☞ இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
☞ கட்டணத்தைச் செலுத்தி கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.
(501)
றோயல் அக்கடமி
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0776649134 நிர்வாகம்

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்,
கணிய அளவையாளர்கள், மேசன்
தொழிலாளர்கள், உப ஒப்பந்தகாரர்கள் தேவை
பிரபல கட்டுமான நிறுவனமான கதிர் இன்ஜினியரிங் கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு பருத்தித்துறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமான வேலைக்கு தகுதியான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கணிய அளவையாளர்கள், மேசன் தொழிலாளர்கள், உப ஒப்பந்தகாரர்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு : 077 2417 103 (529)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org